தினமணி

**அமோக விளைச்சல்: கத்தரிக்காய் விலை சரிவு**

நமது நிருபர்

First Published : 07 Apr 2010 12:00:00 AM IST



கடலூர் அருகே நாணமேடு கிராமத்தில் கத்தரிக்காய் பறிக்கும் விவசாயிகள். படம்: வி.சிவபாலன்.

கடலூர், ஏப். 6: கடலூர் மாவட்டத்தில் இந்த ஆண்டு கத்தரிக்காய் விளைச்சல் அமோகமாக உள்ளது. இதனால் சந்தையில் விலை சரியத் தொடங்கி இருக்கிறது.

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் கத்தரிக்காய் சாகுபடி செய்யப்படுகிறது. எனினும் தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் அதிகமாகக் கத்தரிக்காய் பயிரிடப்படுகிறது.

பொதுவாக கத்தரிக்காய் டிசம்பர்-ஜனவரி, மே-ஜூன், அக்டோபர்- நவம்பர் என 3 பட்டங்களில் சாகுபடி செய்யப்படுகிறது. நட்டு 40 நாள்களில் அறுவடைக்கு வரும். அடுத்து 110 நாள்கள் வரை பலன் கொடுக்கும்.

கடலூர் மாவட்டத்தில் பண்ருட்டி, அண்ணா கிராமம் மற்றும் கடலூர் வட்டங்களில் சுமார் ஆயிரம் ஏக்கரில் கத்தரிக்காய் பயிரிடப்பட்டு உள்ளது. கடலூர் வட்டத்தில் உள்ள நாணமேடு சுபஉப்பளவாடி, கண்டக்காடு உள்ளிட்ட கிராமங்களில் பயிரிடப்படும் கத்தரிக்காய், நாணமேடு கத்தரிக்காய் என்று அழைக்கப்படுகிறது. இங்கு கிடைக்கும் கதரிக்காய் மண் வளம் காரணமாக அளவில் பெரிதாகவும் அதிக சுவையாகவும் இருப்பதால் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

கடலூர் மாவட்டத்தில் தற்போது கத்தரிக்காய் அறுவடை அமோகமாக உள்ளது. இதுகுறித்து நாணமேடு விவசாயி மணவாளன் கூறுகையில், ""கடலூர் பகுதியில் செவந்தம்பட்டி கத்தரி, மற்றும் நாட்டுக் கத்தரி அதிக அளவில் பயிரிடப்படுகிறது. இதில் செவந்தம்பட்டி கத்தரி, ஏக்கருக்கு 25 மூட்டை (60 கிலோ) வரை மகசூல் கிடைக்கிறது. கத்தரிக்காய் அறுவடை தொடங்கி 40 நாள்கள் ஆகிவிட்டது. தொடக்கத்தில் கிலோ ரூ. 20 வரை வியாபாரிகள் கொள்முதல் செய்தார்கள். தற்போது கிலோ ரூ. 7-க்கு வாங்குகிறார்கள். இதைவிட விலை குறைந்தால் விவசாயிகளுக்குக் கட்டுப்படி ஆகாது. கடலூர் பகுதியில் கத்தரி சாகுபடியில் ஏக்கருக்கு ரூ. 50 ஆயிரம் வரை லாபம் கிடைக்கும்'' என்றார்.

கடலூர் காய்கறி அங்காடிகளில் ஒரு மாதத்துக்கு முன்புவரை, கத்தரிக்காய் விலை கிலோவுக்கு ரூ. 30 ஆக உயர்ந்து இருந்தது. தற்போது கிலோ ரூ. 10 முதல் ரூ. 12 வரை விற்பனை செய்யப் படுகிறது. காய்றிகள் விலை சற்று ஏறுமுகமாக உள்ளது என்றும் காய்கறி வியாபாரிகள் தெரிவித்தனர்.

கத்தரி சாகுபடி குறித்து தோட்டக் கலைத்துறை உதவி இயக்குநர் ராமலிங்கம் தெரிவித்தது: கத்தரி சாகுபடியில் விவசாயிகள் நல்ல லாபம்பெற முடியும். துல்லிய கத்தரி சாகுபடி முறையில் விவசாயிகள் தற்போதைய லாபத்தை இரட்டிப்பாக்க முடியும். இதற்காக விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்து வருகிறோம்.கட்டியங்குப்பம் கிராமத்தில், துல்லிய கத்தரி விவசாயம் செய்ய பயிற்சி அளித்து இருக்கிறோம். சொட்டு நீர் பாசனம் செய்தால் சாதாரணமாக பயன்படுத்தும் தண்ணீரைக் கொண்டு 3 மடங்கு சாகுபடி செய்ய முடியும். மின்சார வெட்டு நேரத்தில், துல்லிய விவசாயம் அதிக பயனுள்ளதாக இருக்கும். பூச்சி தாக்குதல் குறைவாக இருக்கும்.

விவசாயிகள் உரிய லாபம்பெற இடைத்தரகர்கள் பிடியில் இருந்து விடுபட வேண்டும். விவசாயிகள் தற்போதைய சூழ்நிலையில், விவசாய முறைகளை மட்டுமன்றி சரியான சந்தைப் படுத்துதலையும் தெரிந்திருக்க வேண்டும். இதற்காக விவசாயிகளுக்கு விளைபொருள்களைச் சந்தைப்படுத்துதல் குறித்து பயிற்சி அளிக்கிறோம். தற்போதைய சூழ்நிலையில் சுயஉதவிக் குழுக்கள் அமைத்து விவசாய விளைபொருள்களை விற்பனை செய்தால், விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கும் என்றார் ராமலிங்கம்.

**பால் விலை உயர்வு குறித்து 2 நாளில் முடிவு: எடியூரப்பா**

First Published : 07 Apr 2010 12:21:18 AM IST

மைசூர், ஏப்.6: பால் விலை உயர்வு குறித்து இன்னும் 2 நாள்களில் தீர்மானிக்கப்படும் என்று முதல்வர் பி.எஸ்.எடியூரப்பா தெரிவித்தார்.

கால்நடைத் தீவன விலை உயர்வு, போக்குவரத்து செலவு அதிகரிப்பு போன்றவை காரணமாக பால் விலையை லிட்டருக்கு ரூ.4 வரை உயர்த்த கர்நாடக பால் கூட்டுறவு சம்மேளம் தீர்மானித்துள்ளது. இதற்கு அரசின் அனுமதிக்காக காத்திருக்கிறது.

பால் விலை உயர்வு தொடர்பாக கடந்த வாரம் முதல்வர் எடியூரப்பா கூறுகையில், இன்னும் சில நாள்களில் பால் விலை உயர்வு குறித்து தீர்மானிக்கப்படும் என்றார். இதையடுத்து பால் விலை உயர்வு தொடர்பாக ஆலோசிக்க உயர் அதிகாரிகள் கூட்டத்தை திங்கள்கிழமை முதல்வர் எடியூரப்பா கூட்டியிருந்தார்.

முதல்வரின் அலுவலக இல்லமான கிருஷ்ணாவில் இந்தக் கூட்டம் நடைபெறவிருந்தது. இதற்காக அதிகாரிகளும் காத்திருந்தனர். ஆனால், திடீரென அக்கூட்டத்தை எடியூரப்பா ரத்து செய்துவிட்டார்.

திங்கள்கிழமைதான் பெங்களூர் மாநகராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இதில் பாஜக 111 வார்டுகளைக் கைப்பற்றி அமோக வெற்றி பெற்றது.

இந்த நிலையில் பால் விலை உயர்வு குறித்து முடிவு செய்தால் அது பெங்களூர் நகர மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்திவிடும், பாஜகவுக்கு வாக்களித்த பெங்களூர் நகர மக்களுக்கு பாஜக அளிக்கும் பரிசு இது என எதிர்க்கட்சிகள் விமர்சனம் செய்ய காரணமாகிவிடும் என முதல்வர் எடியூரப்பா கருதியுள்ளார்.

இதையடுத்தே பால் விலையை உயர்த்துவது தொடர்பாக கூட்டப்பட்டிருந்த கூட்டத்தை எடியூரப்பா ரத்து செய்துவிட்டதாக கூறப்படுகிறது.

அந்தக் கூட்டம் மீண்டும் எப்போது நடைபெறும் என்ற தேதியும் அறிவிக்கப்படவில்லை. இந்நிலையில் மைசூரில் நடைபெற்ற பாஜக ஊழியர்கள் கூட்டத்தில் செவ்வாய்க்கிழமை பேசிய எடியூரப்பா பால் விலை உயர்வு குறித்து குறிப்பிட்டார். அவர் கூறியது:

பால் உற்பத்தி விலை அதிகமாகிவிட்டது. இதனால் விவசாயிகள் நஷ்டம் அடைந்து வருகிறார்கள். எனவே, பால் விலையை உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து இன்னும் 2 நாளில் தீர்மானிக்கப்படும். இவ்வாறு உயர்த்தப்படும் விலை பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும்.

பால் உற்பத்தி விலை அதிகரித்துள்ளதால் பால் பண்ணைக்கு வரும் பால் குறைந்துவிட்டது. இதனால் வெளிமாநிலங்களில் இருந்து பால் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, பால் உற்பத்தியாளர்கள் மாடுகள் வாங்க 6 சதவிகித வட்டியில் ரூ.50 ஆயிரம் வரை கடன் வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான உத்தரவு இன்னும் 2 நாளில் பிறப்பிக்கப்படும் என்றார் அவர்.

தினமலர்

**தென்னந்தோப்புகளில் கோகோ ஊடுபயிர் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு அறிவுரை**

கோவை: "தென்னந்தோப்புகளில் கோகோ பயிரை ஊடுபயிராக சாகுபடி செய்வதால், விவசாயிகள் கூடுதல் வருமானம் பெறலாம்," என, வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி பேசினார். பனைவகை பயிர்களின் ஆண்டு ஆராய்ச்சிக் கூட்டம் கோவை வேளாண் பல்கலையில் நடந்தது. பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி பேசியதாவது:

தேங்காய் உற்பத்தியில் நுண் ணூட்ட சத்துக்களின் பங்கு முக்கியம். தென்னை வளர்ச்சியில் நுண்ணூட்ட சத்துக்களின் தாக்கம் குறித்து ஆய்வு செய்ய, மண் பரிசோதனை அடிப்படையில் ஆய்வுகள் மேற்கொள்ள வேண் டும். எண்ணெய்பனை உற்பத்திக்கு நல்ல வாய்ப்புகள் உள்ளன; இதற்கான ஆராய்ச்சி மேற்கொள்ள பல்கலை விரைவில் தகுந்த இடங்களை தேர்வு செய்யும். தென்னந்தோப்புகளில் கோகோ பயிரை ஊடுபயிராக சாகுபடி செய்வதால், விவசாயிகள் கூடுதல் வருமானம் பெறலாம். கோகோ பயிரை தென்னந்தோப்புகளில் ஊடுபயிராக சாகுபடி செய்ய பயன்படும் தொழில் நுட்பங்களை உருவாக்க, பல்கலை விஞ்ஞானிகள் விவசாயிகளின் வயல்களில் பரிசோதனைகள் மேற்கொள்வர். தற்போது உலர்ந்த கோகோ விதைகள் கிலோ 160 ரூபாய்க்கு விற்கப்படுகிறது; விவசாயிகள் இதை சாகுபடி செய்தால் நல்ல வருமானம் கிடைக்கும். நல்ல தரமான கோகோ நாற்றுகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்க பல்கலை திட்டமிட்டுள்ளது. பனைமரம் கிராமப்புற ஏழை மக்களுக்கு ஒரு வாழ்வாதாரமாக உள்ளது என்பதால், பல்கலை பனைமரம் வளர்ச்சிக்காக, புதிய ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளும். இவ்வாறு, முருகேசபூபதி பேசினார். மத்திய அமைச்சகத்தின் தென்னை வளர்ச்சி வாரிய முன்னாள் தலைவர் பேராசிரியர் ரத்தினம் பேசியதாவது:

இந்தியாவில் 19.14 லட்சம் எக்டரில் தென்னை பயிரிடப்பட்டு, 15,328 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. உற்பத்தி திறன், எக்டருக்கு 8,006 தேங்காய்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது. தென்னை உற்பத்தியை அதிகரிக்க சில வழிமுறைகளை கடைபிடிப்பது அவசியம். அவை, தென்னை சாகுபடிக்கேற்ற துல்லிய பண்ணைய முறைகளை உருவாக்கி, அவற்றின் மூலம் உற்பத்தி செலவை குறைத்து இடுபொருட்களின் பயன்பாட்டுத்திறனை அதிகரிக்கலாம்.

தென்னந் தோப்புகளில் ஒருங்கிணைந்த பண்ணை முறைகளை கடைபிடிப்பதால் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைக்கும். இதற்கு தென்னந் தோப்புகளில் ஊடுபயிர் சாகுபடி, கறவை மாடுகள், கோழி மற்றும் மீன் வளர்த்தல் போன்றவற்றை ஒருங்கிணைத்து விவசாயிகள் செயல்பட வேண்டும். தென்னை இளநீருக்கு சந்தையில் அதிக விலை

கிடைப்பதால், தென்னந் தோப்புகளில் 50 சதவீத நிலப்பரப்பை இளநீர் சாகுபடிக்கும், மீதமுள்ள 50 சதவீத இடத்தை தேங்காய் மற்றும் கொப்பரைக்காகவும் விவசாயிகள் ஒதுக்க வேண்டும்.

உயர் விளைச்சல் ரகங்கள் மற்றும் வீரிய ஒட்டுக்கள், அதிக எண்ணெய் தரும் ரகங்களை உருவாக்குதல், வறட்சியை தாங்கி வளரும் மற்றும் பூச்சி நோய்களுக்கு எதிர்ப் புத்திறன் கொண்ட ரகங்கள் உருவாக்க வேண்டும். ஈரியோபைட் சிலந்திப் பூச்சியின் தாக்குதலை தவிர்க்க தென்னந் தோப்புகளை சுத்தமாக பராமரிப்பது குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைப்பது அவசியம். இவ்வாறு, ரத்தினம் பேசினார். கூட்டத்தில், கோவை வேளாண் பல்கலையை சேர்ந்த 75 விஞ்ஞானிகள் பங்கேற்று தென்னை, எண்ணெய்பனை மற்றும் பனைமரம் ஆகிய பனைவகை மரப்பயிர்களில் தொடர வேண்டிய முக்கிய ஆராய்ச்சிகள் குறித்து கலந்துரையாடினர். பல்கலை ஆராய்ச்சி இயக்குனர் பரமாத்மா உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். பூமார்க்கெட்டிலிருந்து நரசிம்மநாயக்கன்பாளையம் வரை அமைக்கப்படும் ரோடு நான்கு வழிச்சாலையை விட சற்று அகலமானதாக இருக்கும் என கூறப்படுகிறது. இப்பகுதியில் 'சென்டர் மீடியன்' 1.2 மீ.,அகலத்துடன் இருக்கும்.

ரோட்டின் அகலம் குறைந்த பட்சம் 22.7 மீ.,அமையவிருக்கிறது. மேட்டுப்பாளையம் ரோட்டில் உள்ள பாலங்களும் 23.5 மீ., ஆக அகலப்படுத்தப்படவுள்ளன. ரோட் டோரத்திலுள்ள ஏழு கோவில்கள் உள்ளிட்ட ஆக்கிரமிப்புகளை அகற்றி விட்டு பணிகளை துவக்க தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் திட்டமிட்டுள்ளது. சாலை அகலப்படுத்தும் பணிக்காக பூமார்க்கெட்டில் இருந்து நரசிம்மநாயக்கன்பாளையம் வரையுள்ள 1,007 புளியமரங்களில் 500 மரங்கள் வெட்டி அகற்றப் படவுள்ளன. இதற்கான பணிகளை ஓராண்டுக்குள் முடிக்க தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் முடிவு செய்திருப்பதாக கூறப் படுகிறது.

**நெகமம் கொப்பரை ஒரு கிலோ ரூ. 31.75**

பொள்ளாச்சி: நெகமத்தில் நடந்த கொப்பரை ஏலத்தில் ஒரு கிலோவுக்கு அதிகபட்சமாக 31.75 ரூபாய் விலை கிடைத்தது.
நெகமம் சுற்றுப்பகுதி விவசாயிகள் 20 பேர், ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்திற்கு 112 மூட்டை கொப்பரையை எடுத்து வந்தனர். மொத்தம் எட்டு வியாபாரிகள் கொப்பரையை தரம் பிரித்து ஏலம் கூறினர்.

ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சண்முகம் ஏலம் நடத்தினார். முதல் தர கொப்பரை 43 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 31.10 ரூபாய் முதல், அதிகபட்சம் 31.75 ரூபாய் வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை 69 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 22.80 ரூபாய் முதல், அதிகபட்சம் 29.85 ரூபாய் வரை விலை கிடைத்தது. திகாரிகள் கூறியதாவது: தேங்காய் சீசன் துவங்கியுள்ளதால், ஏலத்திற்கு நேற்று கொப்பரை வரத்து அதிகரித்துள்ளது. கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது, கொப்பரை கிலோவுக்கு 35 பைசா விலை உயர்ந்துள்ளது. அரசு கொப்பரை கொள்முதலுக்காக விவசாயிகள் கொப்பரையை இருப்பு வைத்திருப்பதால், வெளி ஏலத்திற்கு வரத்து இன்னும் உயராமல் உள்ளது என்றனர்.

**மானிய விலை பூச்சிமருந்து தனியார் கடைகளில் விற்பனை? விவசாயிகள் குற்றச்சாட்டு**

பேரூர்: விவசாயிகளுக்கு மானிய விலையில் அரசு வழங்கும் பூச்சிக்கொல்லி மருந்துகள், தனியார் உர மருந்து கடைகளில் ரகசியமாக விற்கப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. தொண்டாமுத்தூர் மற்றும் சுற்றுப்பகுதிகளில் பல ஆயிரம் ஏக்கரில் நெல், வாழை, கரும்பு, காலிபிளவர், வெண்டை, தக்காளி, திராட்சை பயிரிடப்பட்டுள்ளது. பயிரை பூச்சி, புழுக்களின் பாதிப்பிலிருந்து பாதுகாக்கவும், அதிக விளைச்சல் பெறவும் பூச்சிமருந்து, உரம் ஆகியவை தனியார்

உரக்கடை, மருந்துக்கடைகளில் விற்கப்படுகின்றன. இதற்கான கடைகள் புறநகரில் ஆலாந்துறை, பூலுவபட்டி, மாதம்பட்டி, காளம்பாளையம் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட இடங்களில் செயல்படுகின்றன. இங்கு பூச்சி, புழு பாதிப்பிலிருந்து பயிர்களை பாதுகாக்க, ரோஹர், எண்டோசல்பர், மோனோ குரோட்டாபாஸ் உள்ளிட்ட மருந்துகளும், அதிக விளைச்சல் பெற பாக்டம்பாஸ், யூரியா, பொட்டாஷ் உரங்களும் விற்கப்படுகின்றன.

கடந்த சில வாரங்களாக, தமிழக அரசால் மானிய விலையில் வழங்கப்பட வேண்டிய 'எக்கோநீம்பிளஸ்' பூச்சி மருந்துகள், தனியார் உர மருந்து கடைகளில் விற்கப்படுவதாக விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர். கடைகளில் கால் லிட்டர், அரை லிட்டர், ஒரு லிட்டர் அளவுகளில், தமிழக அரசின் மானிய விலை பூச்சி மருந்துகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. இதனால், விவசாயிகள் கடும் அதிர்ச்சியடைந்துள்ளனர். வேளாண் அதிகாரிகள் விசாரணை நடத்தி முறைகேடுகளை தடுக்க வேண்டும் என, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். விவசாயிகள் கூறுகையில்,'தமிழக அரசால் மானிய விலையில் வழங்கப்படும் பூச்சி மருந்துகளை, தகுதியான விவசாயிகளை அடையாளம் கண்டறிந்து நேரடியாக வழங்கப்பட வேண்டும். கள ஆய்வு செய்யாமல் அதிகாரிகள் வழங்குவதாலும், மருந்துகளை அதிகாரிகள் தனியாரிடம் கொடுத்து விற்பதாலும் முறைகேடுகள் அதிகரித்துள்ளன' என்றனர்.

**பலாப்பழம் விளைச்சல் அதிகரிப்பு விலை குறையும் வாய்ப்பு**

பண்ருட்டி: பண்ருட்டியில் பலா பழம் விளைச்சல் அதிகரித்துள்ளதால் வெளிமாநிலங்களுக்கு லாரிகள் மூலம் அனுப்பப்படுகிறது. இந்த ஆண்டு பலாப்பழ விளைச்சல் அதிகரிப்பு மற்றும் பலாப்பழம் கூடுதல் விலை காரணமாக விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். பண்ருட்டியில் தற்போது தினந்தோறும் நான்கு லாரிகள் அளவில் பலாப்பழம் வரத்து துவங்கியுள்ளது. பண்ருட்டி பலாப்பழம் சுவையும், இனிப்பும் அதிகமாக இருப்பதால் ஆந்திரா, மகாராஷ்டிரா, கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறது. இந்த ஆண்டு ஜூன் மாதம் கடைசி வரை பலாப்பழம் விற்பனைக்கு வரும் என விவசாயிகள் தெரிவித்தனர். தற்போது ஒருகிலோ 10 ரூபாய் முதல் 20 ரூபாய் வரை விற்பனையாகிறது. 20 நாட்களுக்கு பின் தினந்தோறும் 10 லோடுகள் பலாப்பழம் வரத்துவங்கினால் பலாப்பழ விலை மேலும் குறைய வாய்ப்புள்ளது.

**நெல் உற்பத்திச் செலவு அதிகரிப்பு : கொள்முதல் விலை குறைவால் பாதிப்பு**

திண்டுக்கல்: நெல் அறுவடை 'சீசன்' காரணமாக, கிராமப்புறங்களில் கொள்முதல் விலை குறைந்துள்ளது. உற்பத்திச் செலவு அதிகரித்தபோதும் விலை குறைவால் விவசாயிகள் கவலையில் உள்ளனர். திண்டுக்கல் மாவட்டத்தில் நான்கு ஆண்டுகளுக்கு முன்வரை,16 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. பொதுவாக ஏ.டி.டி., ரகங்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்படும். மலையடிவார பகுதிகளில் சன்னரக (டீலக்ஸ் பொன்னி) வகை நெல் சாகுபடி செய்யப்படுவது வழக்கம். பருவமழை குறைவு, நிலத்தடி நீர் பாதிப்பு, பராமரிப்பு, கூலியாட்கள் தட்டுப் பாடு போன்ற காரணங்களால் சாகுபடி பரப்பு குறைந்து வருகிறது. தற்போது அனைத்து பகுதிகளிலும் நெல் அறுவடை செய்யும் பணி நடக்கிறது. 'சீசன்' காரணமாக கூலியாட்கள் பிரச்னையை தவிர்க்க, பலர் இயந்திரத்தை பயன்படுத்தி வருகின்றனர். ஒரு மணி நேரத்திற்கு ஆயிரம் முதல் ஆயிரத்து 300 ரூபாய் வரை, பரப்பளவிற்கு ஏற்ப கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இந்தாண்டு திண்டுக்கல் மாவட்டத்தில் ஆத்தூர், சித்தையன்கோட்டை, விளாம்பட்டி உள்பட பல இடங்களில் நெல்கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. இவற்றில் குவிண்டால் ஒன்றிற்கு, சன்னரக நெல் ஆயிரத்து 50 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. ஆனால் வெளிமாவட்ட ஆலை உரிமையாளர்கள் பலர், வயல்களுக்கு நேரடியாகச் சென்று நெல் கொள்முதலில் ஈடுபடுகின்றனர். கடந்த ஆண்டு 80 கிலோ கொண்ட மூடை ஒன்றிற்கு, சன்னரக நெல் ஆயிரம் முதல் ஆயிரத்து 100 ரூபாய் வரையிலான விலை கொடுத்தனர். தற்போது இதே ரக

நெல், 850 முதல் 900 ரூபாய்க்கு கொள் முதலாகிறது.மேலும் ஏ.டி.டி., ரக நெல், 700 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. இது கடந்தாண்டைவிட 200 ரூபாய் குறைவாகும். உற்பத்திச் செலவு அதிகரித்துள்ள சூழலில், கொள்முதல் விலை குறைவால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.
திண்டுக்கல் மாவட்ட வேளாண்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், "கடந்தாண்டைவிட 40 சதவீதம், நெல் சாகுபடி பரப்பளவு குறைந்துள்ளது. தற்போது வியாபாரிகள் வயல்களுக்கே சென்று நேரடியாக கொள்முதல் செய்கின்றனர். அரசு நிர்ணய விலையை விட, தனியாரிடம் விற்பதில் பல்வேறு நடைமுறை பிரச்னை தவிர்க்கப்படுகின்றன.இதனால் அரசு கொள்முதல் நிலையங்களுக்கு வரும் நெல்லின் அளவு மிகவும் குறைவாக உள்ளது" என்றார்.
திண்டுக்கல் நெல் மற்றும் நவதானிய வியாபாரி ராஜா கூறுகையில், "அறுவடை 'சீசன்' என்பதால், நெல், அரிசியின் விலை வெகுவாக குறைந்துள்ளது. விழுப்புரம், விக்கிரவாண்டி, புதுவயல், பள்ளத்தூர் போன்ற இடங்களில் ஏராளமான மாடர்ன் ரைஸ் மில்கள் உள்ளன. இவற்றில் தினமும் நூற்றுக்கணக்கான மூடைகள் அளவிற்கு, அரைப்பதற்கான நெல் அனுப்பப்படுகிறது. தற்போது நெல், அரிசி மூடைக்கு, குறைந்தபட்சம் 100 ரூபாய் குறைந்துள்ளது. அடுத்த இரண்டு மாதங்களில் இருப்பு வைப்பதற்காக கொண்டு செல்லப்பட்டு விடும். இதையடுத்து மீண்டும் படிப்படியாக நெல், அரிசி விலை உயரும்" என்றார்.

**முருங்கை விலை சரிவு**

ஒட்டன்சத்திரம்: வரத்து அதிகமாக இருப்பதால் ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் முருங்கை விலை கிலோ 2.50 ரூபாயாக குறைந்தது. ஒட்டன்சத்திரம்,சுற்றியுள்ள பகுதிகளில் முருங்கை அதிக அளவில் விளைந்துள்ளதால் ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்கு வரத்து அதிகமாக உள்ளது. கடந்த வாரத்தை விட இந்த வாரம் முருங்கை விலை பாதியாக குறைந்து விட்டது. கடந்த வாரம் ஒரு கிலோ 7 ரூபாய்க்கு விற்ற செடி முருங்கை நேற்று 3.50 ரூபாய் வரை குறைந்து 3.50க்கு விற்றது. இதே போல் கிலோ 5 ரூபாய்க்கு விற்ற மரம் முருங்கை விலை பாதியாக குறைந்து 2.50க்கு விற்றது. சில மாதங்களுக்கு முன்பு உள்ளூர் வரத்து இல்லாதபோது பரோடாவில் இருந்து இங்கு கொண்டு வரப்பட்ட முருங்கை கிலோ அதிகபட்சமாக 100 ரூபாய்க்கு விற்றது. தற்போது விற்கும் விலையானது கட்டுபடியானதாக இல்லாததால் முருங்கை பயிரிட்ட விவசாயிகள் பாதிப்படைந் துள்ளனர்.

**மஞ்சள் வரத்து குறைவால் குவிண்டால் ரூ. 200 உயர்வு**

ஈரோடு: ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டுக்கு மஞ்சள் வரத்து குறைந்துள்ளது. வரத்து குறைவால் விலை குவிண்டாலுக்கு 200 ரூபாய் வரை அதிகரித்துள்ளது.ஈரோடு பெரிய மாரியம்மன் கோவில் தேர்த் திருவிழாவை முன்னிட்டு மார்ச் 29 முதல் ஏப்ரல் 4ம் தேதி வரை ஏழு நாட்கள் ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது. நேற்று முன்தினம் காலை மார்க்கெட் துவங்கியது. சென்ற சில வாரங்களாக மஞ்சள் விலை குவிண்டால் 12 ஆயிரத்து 900 முதல் 13 ஆயிரம் 800 வரை விற்கப்பட்டதால், அன்றைய மார்க்கெட்டுக்கு மஞ்சள் மூட்டைகள் அதிகளவில் வரும் என்று வியாபாரிகள் எதிர்பார்த்தனர். ஆனால், எதிர்பார்ப்புக்கு மாறாக மஞ்சள் வரத்து குறைந்தே காணப்பட்டது. மஞ்சள் சீஸன் நேரத்தில் நான்கு மஞ்சள் மார்க்கெட்டுக்கும் 5,000 முதல் 6,000 மூட்டைகள் வரத்தாகும். நேற்று முன்தினம் மார்க்கெட்டுக்கு 4,100 மூட்டைகள் மட்டுமே வரத்தானது. விரலி மஞ்சள் குவிண்டால் விலை 12 ஆயிரத்து 869, கிழங்கு மஞ்சள் குவிண்டால் விலை 12 ஆயிரத்து 484 ரூபாய்க்கு விற்றது.

நேற்றைய மார்க்கெட்டுக்கு மஞ்சள் வரத்து குறைந்து 3,000 மூட்டைகள் மட்டுமே வரத்தானது. நேற்று ஈரோடு ஒழுங்கு முறை விற்பனை கூடத்துக்கு 477 மூட்டைகள் வரத்தானதில், முழுவதும் விற்பனையானது. விரலி மஞ்சள் குவிண்டால் 12 ஆயிரத்து 905 ரூபாய், கிழங்கு மஞ்சள் குவிண்டால் 12 ஆயிரத்து 796 ரூபாய்க்கு விற்றது. ஈரோடு

வெளிமார்க்கெட்டில் 1,647 மூட்டைகள் வரத்தானதில் 279 மூட்டைகள் விற்பனையானது. விரலி 13 ஆயிரத்து 136 ரூபாய், கிழங்கு 12 ஆயிரத்து 986 ரூபாய்க்கு விற்றது. நேற்று ஒரே நாளில் 200 ரூபாய் வரை விலை அதிகம் கிடைத்தது.

**பருவமழை முந்தினால் ஜூன் 12ல் திறப்பு கர்நாடகா அணைகளில் 42 டி.எம்.சி., நீர் இருப்பு மேட்டூர் அணை: நீர் இருப்பு 34 டி.எம்.சி.,யாக சரிவு**

மேட்டூர்: மேட்டூர் அணை நீர் இருப்பு 34 டி.எம்.சி.,யாக சரிந்துள்ள நிலையில், கர்நாடகா அணைகளிலும் 42 டி.எம்.சி., நீர் மட்டுமே உள்ளது. நடப்பாண்டில் தென்மேற்கு பருவமழை முன்கூட்டியே பெய்தால் மட்டுமே டெல்டா பாசனத்திற்கு ஜூன் 12ல் நீர் திறக்க வாய்ப்புள்ளது.மேட்டூர் அணை மொத்த நீர்மட்டம் 120 அடி. நீர் இருப்பு 93.470 டி.எம்.சி., அணை நீரின் மூலம் டெல்டா மாவட்டங்களில் 16.5 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. ஆண்டு தோறும் ஜூன்12ல் டெல்டா குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணையில் நீர்திறக்கப்படும்.

ஜூன் 12ல் பாசனத்திற்கு நீர் திறக்க மேட்டூர் அணை நீர்மட்டம் 90 அடியாகவும், நீர் இருப்பு 52 டி.எம்.சி.,யாகவும் இருக்க வேண்டும். கடந்த ஆண்டு ஜூன் 12ல் அணையில் 25 டி.எம்.சி., நீர் மட்டுமே இருந்தது. அதன் பின்னர் பருவமழை தீவிரம் அடைந்து நீர்வரத்து அதிகரித்ததால் ஜூலை 28ம் தேதி டெல்டா பாசனத்திற்கு நீர்திறக்கப்பட்டது. தாமதமாக நீர்திறந்ததால் டெல்டா மாவட்டங்களில் 3.5 லட்சம் ஏக்கரில் குறுவை பயிர் சாகுபடி செய்வதற்கு பதிலாக , 1.72 லட்சம் ஏக்கர் நிலத்தில் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டது. கடந்த ஜூலை 28ல் டெல்டா பாசனத்திற்கு நீர்திறந்து வைத்த வேளாண் அமைச்சர் வீரபாண்டி பாண்டி ஆறுமுகம், 'குறுவையில் சாகுபடி செய்யாமல் விடப்பட்ட 1.78 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் சம்பா பயிர் சாகுபடி செய்வதன் மூலம் நிறைவு செய்யப்படும்' என்றார். நடப்பாண்டில் வரும் ஜூன் 12ல் டெல்டா குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணையில் நீர்திறக்க வேண்டும். ஆனால், நேற்று அணையின் நீர்மட்டம் 71.680 அடியாகவும், நீர் இருப்பு 34.160 டி.எம்.சி.,யாகவும் இருந்தது.

டெல்டா பாசனத்திற்கு நீர்திறக்க இன்னமும் 18 டி.எம்.சி., நீர் தேவை. காவிரி நீர்பிடிப்பு பகுதியில் ஆண்டு தோறும் ஜூன் முதல் ஆகஸ்ட் மாதம் வரை தென்மேற்கு பருவமழை தீவிரம் அடையும். அதன் மூலமே மேட்டூர் அணைக்கு அதிகபட்ச நீர்வரும். ஆனால், சில ஆண்டுகளாக ஜூலை மாதத்திற்கு பின்பே தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைகிறது. அதனால், மேட்டூர் அணை நீர்வரத்து அதிகரிக்க காலதாமதம் ஆகிறது. அதற்கேற்ப, அணையில் இருந்து பாசனத்திற்கு தாமதமாக நீர்திறப்பதால், டெல்டாவில் குறுவை சாகுபடி பாதிக்கிறது. நடப்பாண்டில் குறித்தபடி ஜூன் 12ல் மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கு நீர்திறக்க வேண்டுமானால், காவிரி நீர்பிடிப்பு பகுதியில் மே மாதம் இறுதியிலேயே தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைய வேண்டும். சில ஆண்டுகளாக தென்மேற்கு பருவமழை ஜூலை மாதமே துவங்குவதால், நடப்பாண்டில் சற்று முன்னதாக பருவமழை சீஸன் துவங்க வாய்ப்பு குறைவு என நீர் மேலாண்மை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

நடப்பாண்டில் கர்நாடகாவில் காவிரி, அதன் துணையாறுகள் குறுக்கே கட்டியுள்ள அணைகளில் நீர்மட்டமும் கவலைக்கிடமாக உள்ளது. காவிரி நீர்பிடிப்பு பகுதியில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்து கர்நாடகாவில் உள்ள கே.ஆர்.எஸ்., கபினி அணைகள் நிரம்பினால் மட்டுமே மேட்டூர் அணைக்கு கூடுதல் நீர்வரத்து கிடைக்கும். கே.ஆர்.எஸ்., கபினி, ஹேரங்கி, ஹேமாவதி அணைகளின் மொத்த நீர் கொள்ளளவு 114 டி.எம்.சி.,யாகும்.நேற்று முன்தினம் நிலவரப்படி நான்கு அணைகளிலும் 42 டி.எம்.சி., நீர் மட்டுமே இருப்பு உள்ளது. 49.5 டி.எம்.சி., நீர் கொள்ளளவு கொண்ட கே.ஆர்.எஸ்., அணையில் 24 டி.எம்.சி., நீரும், 19.5 டி.எம்.சி., நீர் கொள்ளளவு கொண்ட கபினி அணையில் 9.5 டி.எம்.சி., நீர் மட்டுமே இருப்பு உள்ளது. நான்கு அணைகளும் நிரம்ப இன்னமும் 72 டி.எம்.சி., நீர் தேவை. எனவே, தென்மேற்கு பருவமழை துவங்கினாலும், கர்நாடகா அணைகள் நிரம்பி மேட்டூர் அணைக்கு நீர்வரத்து கிடைக்க காலதாமதம் ஏற்படும். அதனால், நடப்பாண்டில் ஜூன் 12ல் குறுவை சாகுபடிக்கு நீர்திறப்பதற்கான சாத்தியம்

குறைவாகவே உள்ளது. எனினும், மே மாத இறுதியில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்து, கர்நாடகா அணைகள் நிரம்பி, உபரி நீர் மேட்டூர் அணைக்கு திறக்கப்பட்டால், திட்டமிட்டபடி ஜூன் 12ல் டெல்டா பாசனத்திற்கு நீர்திறக்க முடியும். தமிழகம் மட்டுமின்றி கர்நாடகாவில் உள்ள காவிரி பாசன விவசாயிகளும் பருவமழையை எதிர்பார்த்து ஆவலோடு காத்திருக்கின்றனர்.

**நுண்ணீர் பாசன திட்டத்தில் பயிர் சாகுபடி: ரூ.1.63 லட்சம் மானியம்**

மோகனூர்: நுண்ணீர் பாசன திட்டத்தில், மோகனூர் பகுதியில் பயிர் சாகுபடி செய்த விவசாயிகளுக்கான கூடுதல் மானிய தொகையை யூனியன் சேர்மன் நவலடி வழங்கினார். அனைத்து தோட்டக்கலை பயிர்கள் மற்றும் வேளாண் பயிர்களுக்கு நுண்ணீர் பாசன திட்டத்தின் மூலமும், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் துல்லிய பண்ணையம் மூலமும் சொட்டு நீர் பாசனம் அமைக்கும் விவசாயிகளுக்கு அரசு சார்பில், 65 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. கடந்த 2008-09ம் ஆண்டு மோகனூர் வட்டாரம் வளையப்பட்டி மற்றும் அரூர் கிராமத்தில் துல்லிய பண்ணையம் மூலம் 18 விவசாயிகளும், நுண்ணீர் பாசன திட்டத்தில் இரண்டு பேரும் சொட்டுநீர் பாசனம் அமைத்திருந்தனர்.

அந்த விவசாயிகளுக்கு 15 சதவீதம் கூடுதல் மானியத் தொகை வழங்கும் விழா, மோகனூர் பி.டி.ஓ., அலுவலகத்தில் நடந்தது. யூனியன் சேர்மன் நவலடி தலைமை வகித்தார். தோட்டக்கலை துணை அலுவலர் ராமசாமி வரவேற்றார். உதவி இயக்குனர் ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். விழாவில், கூடுதல் மானியத்தொகை ஒரு லட்சத்து 63 ஆயிரத்து 218 ரூபாய்க்கான காசோலை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

**நீலகிரியை நீல மயமாக்கும் 'ஜெகரண்டா' மலர்களின் சீசன்**

ஊட்டி: நீலகிரியில் தற்போது 'ஜெகரண்டா' என்ற நீல நிறப்பூக்கள் பூத்து குலுங்குகின்றன. நீலகிரியில் நீல வண்ணங்களை கொண்ட தாவரங்கள் சொற்ப அளவிலேயே உள்ளன. இவ்வகை தாவரங்கள் பிரேசிலை தாயகமாகக் கொண்டு, மெக்சிகோ மற்றும் அர்ஜென்டினா போன்ற நாடுகளுக்கு பரவி 17, 18ம் நூற்றாண்டில் ஆசியாவிற்கு பரவியது. இவ்வகை தாவரங்களை கடந்த 18ம் நூற்றாண்டின் இறுதியில் பேராசிரியர் ஸ்டூவர்ட் மெகலன் என்ற விஞ்ஞானி இந்தியாவில் அறிமுகப்படுத்தியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவற்றில், 'பிக்னோனியேசியே' என்ற தாவரவியல் பெயரைக் கொண்ட 'ஜெகரண்டா மைமோசிபோலியா' என்ற வகை மரங்கள் ஊட்டி-குன்னூர் மலை சாலைகளின் ஓரத்தில் அதிகம் காணப்படுகின்றன. இந்த மரங்களில் உள்ள நீல நிற மலர்களில் 'லேவண்டர்' என்ற வாசனைப் பொருள் உள்ளதாக கூறப்படுகிறது.

ஆண்டுதோறும் மார்ச், ஏப்ரல் மாதத்தில் இவை பூத்து குலுங்கும். இம்மரத்தில் உள்ள காய்கள் தட்டையாக 5 செ.மீ.,முதல் 7 செ.மீ.,வரை விட்டம் கொண்டது.இம்மரம் பர்னிச்சர்கள் செய்யவும், பெட்டிகள் தயாரிக்கவும் பயன்படுகிறது. இம்மரத்தில் நன்கு பளபளப்பு ஏறும் என்பதால் ஈட்டி மரம் என தவறான தகவலை கூறி சிலர் விற்பனை செய்கின்றனர்.

மரத்தின் கன்றுகள் 10 லிருந்து 30 ரூபாய் வரை வனத்துறை நர்சரிகளில் விற்பனை செய்யப்படுகிறது. கோடை காலம் துவங்கியுள்ள நிலையில் தற்போது நீலகிரி முழுவதும் ஜெகரண்டா மலர்கள் பூத்து வனங்களை 'நீல'மாக மாற்றி வருகிறது.

**ஊட்டி பூங்காவில் துலிப் மலர்கள்**

ஊட்டி: ஊட்டி தாவரவியல் பூங்காவில், தொட்டிகளில் நடவு செய்யப்பட்டுள்ள துலிப் மலர்கள், கண்களுக்கு விருந்தளிப்பதாக உள்ளன. ஊட்டி தாவரவியல் பூங்காவில் 114வது மலர் கண்காட்சி மே 14, 15, 16ம் தேதிகளில் நடக்கிறது. பூங்கா பொலிவுபடுத்தப்பட்டு வருகிறது. மலர் கண்காட்சிக்காக 200 ரகங்களில் மூன்று லட்சம் மலர் நாற்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன. காட்சிக்காக 15 ஆயிரம் தொட்டிகளில் மலர் செடிகள் நடவு செய்யப்பட்டு தயார் நிலையில் உள்ளன. இந்தாண்டு சிறப்பம்சமாக, ஹாலந்து நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 1,000 துலிப் மலர்கள் 350 தொட்டிகளில் நடவு செய்யப்பட்டுள்ளன. பல்வேறு நிற துலிப் மலர்கள், சுற்றுலாப் பயணிகளை வெகுவாக கவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மலர்கள் 15 நாட்கள் மட்டுமே வாடாமல் இருக்கும் என்பதால், மே மாதம் முழுவதும் துலிப் பூக்கள் மலரும் வகையில் இரு கட்டமாக இம்மலர்கள் நடவு செய்யப்பட்டுள்ளன. தொட்டிகளில் நடவு செய்யப்பட்ட துலீப் மலர் தற்போதே பூக்க துவங்கி விட்டன. இளஞ்சிவப்பு நிறத்தில் பூத்துள்ள துலிப் மலர்கள், பூங்காவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளை கவர்ந்து வருகின்றன.

**வெயிலில் கருகும் தேயிலை கவலையில் வாடும் 'முகங்கள்' : விவசாயிகளுக்கு அடி மேல் அடி**

கோத்தகிரி: நீலகிரியில் நிலவும் கடுமையான வெயில் காரணமாக தேயிலை தோட்டங்கள் கருகி வருவதால், விவசாயிகள் அச்சம் அடைந்துள்ளனர். நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விவசாயம் மாவட்ட பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. இத்தொழிலில் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு மற்றும் குறு விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் மற்றும் வியாபாரிகள் இத்தொழிலையே நம்பியுள்ளனர். கடந்த 6 ஆண்டுகளுக்கு முன் ஒரு கிலோ பசுந்தேயிலைக்கு 3 முதல் 4 ரூபாய் வரை மட்டுமே விலை கிடைத்துவந்த நிலையில், இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக, ஒரு கிலோ பசுந்தேயிலை 10 முதல் 13 ரூபாய் வரை விலை கிடைத்தது. இந்த விலை தேயிலை தோட்டங்களை பராமரிக்கவே போதாத நிலையில், விவசாயிகள் ஓரளவு ஆறுதல் அடைந்துள்ளனர். இந்நிலையில், குன்னூர் ஏல மையத்தில் வர்த்தர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை தூள் விற்பனையாகாமல் தேக்கம் அடைந்துள்ளது. இதனால், கடந்த சில வாரங்களாக பசுந்தேயிலை விலை இறங்குமுகமாகவே உள்ளது. வறட்சி காரணமாக பசுந்தேயிலை மகசூல் வெகுவாக குறைந்துள்ளதால், விவசாயிகள் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

இந்நிலையில், கோடை வெயிலின் தாக்கத்தால், கடும் வறட்சி நிலவுவதால், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் தேயிலை செடிகள் கருகி வருகின்றன. குறிப்பாக, கோத்தகிரி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் இதன் தாக்கம் அதிகமாகவே உள்ளது. கடுமையான வெயில் காரணமாக, தேயிலை செடிகளில் இலை முழுவதும் உதிர்ந்து குச்சிகள் மட்டுமே எஞ்சியுள்ளன. இனிவரும் நாட்களில் கத்திரி வெயிலின் தாக்கமும் அதிகரிக்கக் கூடும் என்பதால், பாதிப்பும் அதிகரிக்கும். தவிர, வறட்சி காரணமாக, தோட்டங்களில் 'சாம்பல்' நிறம் நோய் தாக்கவும் வாய்ப்புள்ளதாக விவசாயிகள் அச்சம் அடைந்துள்ளனர். கருகிப்போன தேயிலை செடிகள் மீண்டும் துளிர் விட்டு பழைய நிலையை அடைய, மழை பெய்தாகவேண்டும்; அதுவரை விவசாயிகளுக்கு மகசூல் வெகுவாக குறைய வாய்ப்புள்ளதாலும், பசுந்தேயிலைக்கு விலை குறைந்து வருவதாலும் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

**தேயிலை ஏலத்தில் மந்தநலை விலை வீழ்ச்சியால் கவலை**

குன்னூர்: குன்னூர் தேயிலை ஏலத்தில் தென்படும் மந்தநிலை தேயிலை தொழில் சார்ந்தோரை கவலையடையச் செய்துள்ளது; தேயிலை வரத்து குறைந்தும் கிராக்கி அதிகரிக்காததால் விலை வீழ்ச்சி தொடர்கிறது. நீலகிரியில்

உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூள் குன்னூர் தேயிலை ஏல மையத்தில் வாரந்தோறும் விற்கப்படுகிறது. ஆந்திரா, கர்னாடா, பஞ்சாப், குஜராத், ராஜஸ்தான் உள்ளிட்ட வட மாநில வர்த்தகர்களும், பாகிஸ்தான், ரஷ்யா, எகிப்து உட்பட வெளிநாட்டு வர்த்தகர்களும் நீலகிரி தேயிலை தூளை வாங்கி வந்தனர். கடந்த நான்கு மாதமாக தேயிலை ஏலத்தில் மந்த நிலை நீடிக்கிறது. பொதுவாக, நவம்பர் - பிப்ரவரி மாதங்களில் வட மாநிலங்களில் தேயிலை தொழில் ஸ்தம்பிக்கும்; பல இடங்களில் தேயிலை உற்பத்தி முற்றிலுமாக நிறுத்தப்படும். இதனால், வட மாநில வர்த்தகர்கள் நீலகிரி தேயிலை தூளை அதிகளவு வாங்குவர்; நீலகிரி தேயிலை தொழில் களைகட்டும்.

இந்தாண்டு இதற்கு நேர்மாறான நிலை ஏற்பட்டுள்ளது; கடந்த நான்கு மாதாக குன்னூர் ஏலத்தில் மந்த நிலை நீடிக்கிறது; வாரந்தோறும் பெருமளவு தேயிலை தூள் தேக்கமடைகிறது. கடந்த வாரம் நடத்தப்பட்ட ஏலத்தில் சி.டி.சி., மற்றும் ஆர்தோடக்ஸ் ரக தேயிலை தூளின் சராசரி விற்பனை விலை கிலோவுக்கு 63.12 ரூபாயாக இருந்தது; கடந்தாண்டு(2009) இதே காலகட்டத்தில் 69.59 ரூபாயாக இருந்தது. ஆர்தோடக்ஸ் ரகத்தை பொறுத்தவரை சராசரி விலை கிலோவுக்கு 69.82 ரூபாயாக இருந்தது; கடந்தாண்டு(2009) இதே காலகட்டத்தில் 79 ரூபாய் இருந்தது. கிலோவுக்கு 10 ரூபாய் வரை விலை வித்தியாசம் தென்படுவதால் ஆர்தோடக்ஸ் உற்பத்தியாளர்கள் கவலையடைந்துள்ளனர்.

சி.டி.சி., ரகத்தை பொறுத்தவரை தற்போது சராசரி விலை கிலோவுக்கு 62.70 ரூபாயாக உள்ளது; கடந்தாண்டு(2009) இதே காலகட்டத்தில் 68.75 ரூபாயாக இருந்தது. இந்த விலை வித்தியாசம், சிறு விவசாயிகள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சிறு விவசாயிகள் தாங்கள் வழங்கி வந்த பசுந்தேயிலைக்கு கிலோவுக்கு 14 ரூபாய்க்கு மேல் விலை பெற்ற நிலை மாறி, இந்த வாரம் 9.50 ரூபாய் மட்டுமே விலையாக பெற்றுள்ளனர்; மாத விலையும் 10.50 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இருப்பினும், ஆங்காங்கே செயல்படும் சிறு தேயிலை விவசாய சங்கங்கள் தங்களிடம் உறுப்பினர்களாக உள்ள விவசாயிகளுக்கு 15 ரூபாய்க்கு மேல் விலை வழங்கி வருகின்றன. கடந்த சில மாதங்களை ஒப்பிடுகையில் விவசாயிகள் பெற்று வந்த விலையில் அடி விழத்துவங்கியுள்ளது. லேசாக தென்பட துவங்கியுள்ள விலை வீழ்ச்சி விவசாயிகளை கவலையில் ஆழ்த்தியுள்ளது. நீலகிரி தேயிலைக்கான மார்கெட் யுக்தியை மேம்படுத்தி, வர்த்தகர்களின் கவனத்தை நீலகிரி தேயிலையின் மீது திருப்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. தவறும்பட்சத்தில், மீண்டும் ஒரு விலை வீழ்ச்சியை எதிர்கொள்ள வேண்டிய நிலை வந்தாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை.

**ரேஷனில் உருளைக்கிழங்கு விற்பனை துவக்கம்**

பெரம்பலூர் :பெரம்பலூரில் உள்ள ரேஷன் கடைகளில் உருளைகிழங்கு விற்பனை துவக்கப்பட்டுள்ளது. பெரம்பலூர் வட்ட வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த நிகழ்ச்சியில் கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைபதிவாளர் குணஐய்யப்பதுரை உருளை கிழங்கு விற்பனையை துவக்கிவைத்து பேசுகையில், மேட்டுப்பாளையத்தில் இருந்து நேரடியாக உயர்தரமான உருளை கிழங்கினை கொள்முதல் செய்து குறைந்த விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும், விற்பனை செய்யப்படுகிறது. மேலும் முதற்கட்டமாக பெரம்பலூரில் உள்ள 10 ரேஷன் கடைகளிலும், உழவர் சந்தைகளிலும் உருளை கிழங்கு விற்பனை செய்யப்படும்.பின்னர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ரேஷன் கடைகளிலும் உருளை கிழங்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இதனை பொதுமக்களும், உணவக உரிமையாளர்களும் வாங்கிப்பயன் பெறலாம் என்றார்.நிகழ்ச்சியில், துணைபதிவாளர் ஜெயராமன்(பொதுவிநியோக திட்டம்), தனி அலுவலர் அறப்பள்ளி, சார்பதிவாளர் மருதுமுத்து, சங்க செயலாளர் காந்திமதி, எழுத்தர் ராம்குமார் மற்றும் விற்பனையாளர்கள் அருண்குமார், ராகவன், தேவராஜ், செல்வஜானகி, சந்திரவடிவம் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**1,000 குவிண்டால் மஞ்சள் ரூ.ஒரு கோடிக்கு ஏலம்**

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் 1,000 குவிண்டால் மஞ்சள் ஒரு கோடி ரூபாய்க்கு ஏலம் போனது. ஆத்தூர் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் மஞ்சள் அறுவடை பணி நடந்து வருகிறது. இங்கு விளையும் மஞ்சள் மட்டுமின்றி கச்சிராபாளையம், பெரம்பலூர், அரியலூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை உள்ளிட்ட பகுதியில் அறுவடை செய்யும் மஞ்சள் சுத்தம் செய்து, ஈரோடு, நாமக்கல் நாமகிரிபேட்டை ஒழுங்குமுறை விற்பனை கூடம், ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம், தனியார் மண்டிகளில் நடக்கும் மறைமுக டெண்டர் ஏலத்தில் விவசாயிகள் மஞ்சள் விற்பனை செய்து வருகின்றனர்.

கடந்த மார்ச் 6ம் தேதி ஒரு குவிண்டால் மஞ்சள் 10 ஆயிரத்து 789 ரூபாய்க்கு விற்கப்பட்டது. 13ம் தேதி ஒரு குவிண்டால்12 ஆயிரத்து 899 ரூபாயும், 20ம் தேதி விரலி மஞ்சள் ஒரு குவிண்டால் 14 ஆயிரத்து 669 ரூபாய்க்கு விற்பனையானது. கடந்த மாதம் 27ம் தேதி விரலி மஞ்சள் ஒரு குவிண்டால் 13 ஆயிரத்து 320 ரூபாயும், உருண்டை மஞ்சள் ஒரு குவிண்டால் 13 ஆயிரத்து 20 ரூபாயும், பனங்காலி மஞ்சள் ஒரு குவிண்டால் 13 ஆயிரத்து 9 ரூபாய் விற்பனையானது. ஒரு குவிண்டால் மஞ்சள் 1,349 ரூபாய் விலை குறைவால் விவசாயிகள் கவலையடைந்தனர்.

நேற்று முன்தினம் 3ம் தேதி இரவு நடந்த மஞ்சள் ஏலத்தில் விரலி மஞ்சள் குவிண்டால் அதிகபட்சமாக 13 ஆயிரத்து 529 ரூபாயும், குறைந்த பட்சமாக 12 ஆயிரத்து 929 ரூபாயும், உருண்டை மஞ்சள் குவிண்டால் அதிகபட்சமாக 13 ஆயிரத்து 319 ரூபாயும், குறைந்த பட்சமாக ஒரு குவிண்டால் 12 ஆயிரத்து 919 ரூபாயும், பனங்காலி மஞ்சள் ஒரு குவிண்டால் 11 ஆயிரத்து 389 ரூபாயும், குறைந்த பட்சமாக ஒரு குவிண்டால் 10 ஆயிரத்து 859 ரூபாக்கு ஏலம் போனது. ஆயிரத்து 500 மூட்டைகள் கொண்ட ஆயிரம் குவிண்டால் மஞ்சள், ஒரு கோடி ரூபாய்க்கு ஏலம் போனது. கடந்த வாரத்தை காட்டிலும் ஏலத்துக்கு மஞ்சள் வரத்து அதிகரித்தும், ஒரு குவிண்டாலுக்கு 209 ரூபாய் விலை உயர்ந்ததாலும் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**கடும் வறட்சி! செத்து மடியும் தென்னை மரங்கள்: இழப்பீடு வழங்க விவசாயிகள் கோரிக்கை**

பனமரத்துப்பட்டி: பனமரத்துப்பட்டி பகுதியில் நிலவும் கடும் வறட்சியால் நீண்ட காலம் பலன் அளித்து வந்த தென்னை மரங்கள் செத்து மடிவதால்,விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர். சேலம் மாவட்டம் பனமரத்துப்பட்டி பகுதியில் விவசாயம் பிரதான தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பகுதியில் அரளிப்பூ, ரோஜா, குண்டு மல்லி மற்றும் காய்கறி அதிக அளவில் உற்பத்திசெய்யப்பட்டு வருகிறது. அடுத்தபடியாக குறைந்த பராமரிப்பு செலவில் நீண்ட நாட்களுக்கு தொடர்ந்து வருவாய் கொடுக்கும் தென்னை மரங்களும் தோப்பாக பயிரிட்டுள்ளனர். குரால்நத்தம், திப்பம்பட்டி,கம்மாளப்பட்டி,குள்ளப்பநாயக்கனூர், பெரமனூர்,பள்ளித்தெருப்பட்டி,பனமரத்துப்பட்டி உள்ளிட்ட பகுதி பல ஏக்கர் பரப்பளவில் தென்னை மரங்கள் உள்ளன. தென்னை மரங்கள் நடவு செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் முதல் ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து காய் உற்பத்தி இருக்கும். இளநீர்,தேங்காய் விற்பனையால் அதிக வருவாய் கிடைத்து வருவதால் விவசாயிகள் ஆர்வத்துடன் தென்னை நடவு செய்துள்ளனர். தற்போது பனமரத்துப்பட்டி பகுதியில், போதிய மழை இல்லாததாலும், கடுமையான வெப்பம் நிலவுவதாலும், கடும் வறட்சி ஏற்பட்டு விவசாய கிணறுகள் வறண்டதால் கடும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதனால் அரளி,ரோஜா உள்ளிட்ட செடிகள் வெயிலில் கருகியது. அதை தொடர்ந்து பல ஆண்டுகள் வளர்த்த வந்த தென்னை மரங்களும் கருக தொடங்கி உள்ளன. கோடை காலத்தில் இளநீர் விற்பனை சூடுபிடிப்பதால், விவசாயிகள் மற்றும் வியாபாரிகளுக்கு கணிசமான வருவாய் கிடைக்கும்.

இளநீர் கொடுத்து தாகத்தை தணித்துவந்த தென்னை மரங்கள் வறட்சியால் உயிர் தண்ணீர் இன்றி செத்து மடிந்து வருகிறது. தண்ணீர் பற்றாக்குறையால் தென்னை மரங்களின் மட்டைகள் கருகி மரத்தில் இருந்து சரிந்து கீழே விழுகின்றன. அதை தொடர்ந்து கொத்து,கொத்தாக பிஞ்சுகள் (குறும்பிகள்) காய்ந்து கருகி கொட்டி வருகின்றன. மட்டைகள் சரிந்து, மொட்டையாகி இறுதியில் தென்னை மரத்தின் குறுத்துகள் காய்ந்து ஓடிந்து விழுகின்றனர். பல ஆண்டுகளாக பலன் கொடுத்து வந்த தென்னை மரங்கள் கண் எதிரில் கருதி செத்து மடிவதை கண்டு விவசாயிகள் கண்ணீர் வடிகின்றனர்.

இது குறித்து விவசாயிகள் கூறுகையில் ' பல ஆண்டுகள் வளர்த்து வந்த தென்னை மரங்கள் தண்ணீர் இன்றி செத்து வருகிறது. தென்னை மரம் ஓன்று ஆண்டு 300 முதல் 500 ரூபாய் வரையில் குத்தகை விட்டு வந்தோம். இளநீர் ஓன்று 3 முதல் 5 ரூபாய் வரை விற்பனை செய்து வந்தோம். ஒரு ஆண்டுக்கு மூன்று முறை காய்கள் அறுவடை செய்யப்படும்.குறைந்த பராமரிப்பு செலவில் தென்னை மரம் பலன் கொடுத்து வந்தது. தற்போது வறட்சியால் கருகி முதலுக்கு மோசம் ஏற்பட்டுள்ளது. தென்னை மரங்களுக்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும்' என்றனர்.

**பஞ்சாப் வேளாண் பல்கலை. துணைவேந்தர் தஞ்சை விவசாயிகளுடன் கலந்துரையாடல்**

திருவையாறு:திருவையாறு சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத் தில் பஞ்சாப் மாநில வேளாண் பல்கலைக் கழக துணைவேந்தர் கான், வீடியோ கான்பரசிங் மூலமாக விவசாயிகளுடன் பேசினார்.தஞ்சை மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் பயிர்கள், விவசாய தொழிலில் ஏற்படும் பாதிப்புகள் குறித்து கேட்டறிந்தார். விவசாயிகளின் கருத்துகளை ஆராய்ச்சி நிறுவன ஆலோசகர் பழனியப்பன் தொகுத்துக் கூறினார். பஞ்சாப்பிலும்,தஞ்சை மாவட்டத்திலும் ஒரே நேரத்தில் தீவிர சாகுபடித் திட்டம் தொடங்கியதை நினைவு கூர்ந்து தற்போது தஞ்சை மாவட்டத்தில் காவிரியில் காலத்தே தண்ணீர் கிடைக்காததால் ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழ்நிலையை எடுத்துக் கூறினார்.

வயல்வெளி பள்ளி வாயிலாக பூச்சி நோய் மற்றும் வயல்வெளி ஆய்வுகள் முன்பு எடுத்துச் சொல்லப்பட்டது போல் விவசாயிகள் பருவநிலை பள்ளி தொடங்க வேண்டும்.அதற்கான ஆயத்தங்களை பஞ்சாப் வேளாண் பல்கலைக் கழகம், ஆராய்ச்சி நிறுவனம் இணைந்து செயலாற்றலாம் என்றார். வீடியோ தொலை தொடர்பை நிலைய பொறுப்பாளர் முத்துக்குமார் ஒருங்கிணைத்தார். தொழில் நுட்ப உதவியாளர் முருகன் விவசாயிகளின் கேள்விகளைதொகுத்தளித்தார்.

**பருத்தியில் மாவு பூச்சிகளை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்: வேளாண் அதிகாரி விளக்கம்**

தென்காசி:பருத்தியில் மவு பூச்சிகளை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து வாசுதேவநல்லூர் வேளாண்மை உதவி இயக்குநர் பெருமாள் விளக்கம் அளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:வாசுதேவநல்லூர் வட்டாரத்தில் பருத்தி பயிர் முள்ளிகுளம், புளியங்குடி, வாசுதேவநல்லூர், சிவகிரி, ராயகிரி, தென்மலை பகுதிகளில் கோடை இறவையாக சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த பருத்தி பயிரில் மாவு பூச்சிகளின் தாக்குதல் தென்பட வாய்ப்புள்ளது. இதனை கட்டுப்படுத்துவது அவசியமாகும்.

* மாவு பூச்சி தாக்குதலுக்கான காரணங்கள்: தொடர்ச்சியாக மழையில்லாததாலும், வறட்சியான பருவ சூழல் நிலவுவதாலும், பாசன நீர் பற்றாக்குறையாக இருப்பதாலும், கட்டுப்பாடற்ற ஒன்றுக்கு மேற்பட்ட ரசாயன பூச்சி கொல்லிகளை தெளிப்பதாலும், வயல் வரப்புகளை, சாலை ஓரங்களை சுத்தப்படுத்தாமல் இருப்பதாலும் பருத்தி பயிரில் மாவு பூச்சிகள் தாக்குகின்றன.

* அறிகுறிகள்:பருத்தி பயிரி இலை தண்டு மற்றும் காய் பகுதிகளில் திட்டு திட்டாக பஞ்சு போன்ற வெண்மையான பூச்சிகளின் நடமாட்டம் காணப்படும். இளம் இலைகள் சுருங்கி காணப்படும். செடிகள் வாடி காய்ந்து விடுதல், அதிக அளவில் எறும்புகள் நடமாடுதல், செடி வளர்ச்சி குன்றி தேன் போன்ற திரவம் வடிதல் உள்ளிட்டவைகள் மாவு பூச்சி தாக்குதலின் அறிகுறிகளாகும்.

* கட்டுப்படுத்தும் முறைகள்:மாவு பூச்சி உற்பத்திக்கு ஆதாரமாக உள்ள வயல் மற்றும் சாலை ஓரங்களில் உள்ள நீர் முள்ளி, பார்த்தீனியம், சாரணை மற்றும் துத்தி செடி உள்ளிட்ட களை செடிகளை வேருடன் பிடுங்கி எரித்து விட வேண்டும். வயல் வரப்புகளை களை இல்லாமல் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

புரோபெனாபாஸ் 50 இசி 2 மிலி அல்லது மீதைல் பாரத்தியான் 50 இசி 2 மிலி அல்லது இமிட்டோகுளோர்பிட் 17.8 எஸ்.எல். 0.6 மிலி அல்லது மீன் எண்ணெய் சோப் 40 கிராம் ஒரு லிட்டர் தண்ணீர் என்ற விகிதா சாரத்தில் 200 லிட்டர் தண்ணீரில் தேவையான மருந்தை கலந்து தெளிக்க வேண்டும். காலை அல்லது மாலை வேளைகளில் மட்டுமே தெளிக்க வேண்டும். பருத்தி பயிரின் அனைத்து பாகங்களிலும் தெளிக்க வேண்டும். இலையின் மேல் பாகம், கீழ்பாகம் மற்றும் தண்டு பகுதி ஆகிய பாகங்கள் அனைத்திலும் மருந்து நனையும்படி தெளிக்க வேண்டும். வயல் வரப்புகளின் மேல் உள்ள புல் பூண்டுகளின் மேலும் மருந்து தெளிக்க வேண்டும்.

சுழற்சி முறையில் ரசாயன மருந்துகளை மாற்றி தெளிக்க வேண்டும். ஒரு டேங்க் அளவுக்கு மருந்து கரைசலை ஒரு பிளாஸ்டிக் வாளியில் தயாரித்து கைத்தெளிப்பானில் ஊற்றி தெளிக்க வேண்டும். எக்காரணத்தை கொண்டும் டேங்கில் தண்ணீரை நிரப்பி மருந்தை தனியாக ஊற்ற கூடாது.மேலும் இதுபற்றிய விபரங்களுக்கு வாசுதேவநல்லூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர், வேளாண்மை அலுவலர் மற்றும் துணை வேளாண்மை அலுவலர் அல்லது முள்ளிகுளம், புளியங்குடி, வாசுதேவநல்லூர், சிவகிரி, ராயகிரி, தென்மலை பகுதிகளின் உதவி வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம் என வாசுதேவநல்லூர் வேளாண்மை உதவி இயக்குநர் பெருமாள் அறிக்கையில் கூறியுள்ளார்.

**மண் பரிசோதனை செய்து பயிர் வளம் காக்க வேண்டும்:வேளாண் அதிகாரி 'அட்வைஸ்'**

தென்காசி:மண் பரிசோதனை செய்து அதற்கு ஏற்ற பயிர் சாகுபடி செய்து அதிக மகசூல் பெற விவசாயிகள் முன் வரவேண்டும் என தென்காசி வேளாண்மை உதவி இயக்குநர் ஐரிஷ்சேகர் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

* மண் பரிசோதனை செய்வதன் அவசியம்: பயிர் முழுமையாக வளர்ச்சியடைந்து நல்ல மகூலை தருவதற்கு 21 வகையான சத்துகள் போதுமான அளவில் கிடைக்க வேண்டும். இவற்றில் கார்பன், ஆக்ஸிஜன், ஹைட்ரஜன் போன்ற சத்துகளை மண்ணிலிருந்தே பயிர் எடுத்து கொள்கிறது. அறிவியல் ரீதியான மேலாண்மை முறைகளை கடைபிடிக்காவிட்டால் ஒவ்வொரு பருவத்திலும் சாகுபடி செய்யப்படும் பயிரானது தனக்கு தேவையான சத்துகளை எடுத்து கொள்வதன் காரணமாக காலப்போக்கில் மண் வளமில்லாமல் போய்விடும்.மண் அரித்தல், ஆவியாதல் மூலமாகவும் சிறிதளவு சத்துகள் மண்ணிலிருந்து வெளியேறுகின்றன.

இவ்வாறு குறையும் சத்துகளுக்கு பதிலாக உரமிடுவது அடுத்து பயிரிட போகும் பயிர் அதிக மகசூலை கொடுப்பதற்கு அவசியமாகும். மண்ணில் பயிருக்கு கிடைக்கும் நிலையில் உள்ள சத்துகளின் அளவானது மண் வகை, மண் உருவான விதம் மற்றும் விவசாயிகள் கடைபிடிக்கும் சாகுபடி முறைகளை பொருத்து மாறுபடுகின்றது.ஒவ்வொரு பயிருக்கும் தேவைப்படும் சத்துகளின் அளவு மாறுபடுகிறது. மண்ணிலிருந்து பயிருக்கு கிடைக்கும் நிலையில் உள்ள சத்துகளின்

அளவை கணக்கிட்டு பயிருக்கு தேவையான சத்துகளுடன் ஒப்பிட்டு பயிருக்கு இட வேண்டிய உரங்களின் அளவை அறிய மண் பரிசோதனை செய்ய வேண்டும். மண் பரிசோதனை செய்வதன் மூலம் மண்ணில் பயிரின் வளர்ச்சியை பாதிக்கும் பிரச்னைகள் இருக்கின்றதா என்பதையும் அறிந்து அவற்றை நிவர்த்தி செய்யும் நடவடிக்கைகள் எடுக்கலாம்.

* மண் மாதிரி சேகரிக்கும் முறை:மண்ணிலிருந்து கிடைக்கும் நிலையில் உள்ள சத்துகள் பயிரின் வேரின் ஆழத்தை பொருத்து அமைவதால் மண் மாதிரி எடுக்க வேண்டிய ஆழமும் சாகுபடி செய்யப்போகும் பயிரை பொருத்து மாறுபடும். நெல், உளுந்து, பச்சை பயறு, நிலக்கடலை, எள் ஆகிய பயிர்களுக்கு அரை அடி ஆழத்திலும், கரும்பு, மிளகாய், பருத்தி, வாழை மற்றும் காய்கறி பயிர்களுக்கு முக்கால் அடி ஆழத்திலும் மண் மாதிரி சேகரிக்க வேண்டும். தென்னை, மா போன்ற மர பயிர்களுக்கு மூன்று அடி நீள, அகல ஆழத்தில் குழி வெட்டி மூன்று மண் மாதிரிகள் சேகரிக்க வேண்டும். நிலம் தரிசாக இருக்கும் போது மண் மாதிரி எடுப்பதே சிறந்தது. வளர்ந்த பயிர்களில் மாதிரி எடுக்கும் போது பயிர் வரிசைக்கு இடையில் மண் மாதிரி எடுக்க வேண்டும்.

வெவ்வேறு தோற்றம் கொண்ட மண் மற்றும் வெவ்வேறு பயிர் சாகுபடி முறைகள் பின்பற்றப்பட்ட மண்ணிற்கு தனி தனியாக மண் மாதிரி எடுக்க வேண்டும். மண் வளம் வேறுபடும் விதத்தை பொருத்து ஒரு ஏக்கர் முதல் 5 ஏக்கர் கொண்ட பரப்பிற்கு ஒரு மண் மாதிரி எடுக்க வேண்டும். கடந்த காலங்களில் மிக குறைந்த பரப்பில் பயிர் வளர்ச்சி குன்றி காணப்பட்டிருந்தாலும் அப்பரப்பிற்கு என தனியாக மண் மாதிரி சேகரிக்க வேண்டும். 500 கிராம் கொண்ட ஒரு மண் மாதிரி சேகரிக்க 5 முதல் 10 இடங்களில் ஆங்கில எழுத்து 'வி' வடிவத்தில் தேவையான ஆழத்தில் மண்ணை தோண்டி அதன் பக்கவாட்டில் உள்ள மண்ணை மண் வெட்டியால் வெட்டி எடுத்து பாலிதீன் விரிப்பில் போட்டு நிழலில் உலர்த்த வேண்டும்.

இம்மண்ணில் உள்ள வேர்களை நீக்க வேண்டும். வட்ட வடிவில் மண்ணை பரப்பி நான்கு சமபாகங்களாக பிரிக்க வேண்டும். எதிர் எதிர் பக்கங்களில் உள்ள மண்ணை நீக்கி மீதமுள்ளவற்றை சேர்த்து மீண்டும் வட்ட வடிவில் மண்ணை விரித்து பரப்ப வேண்டும். இதே முறையை கடைபிடித்து 500 கிராம் கிடைக்கும் வரை மண்ணை குறைக்க வேண்டும். இதனை ஒரு பாலிதீன் பையில் போட்டு விவசாயின் பெயர் மற்றும் முகவரி, சர்வே எண், பயிரிட போகும் பயிர் போன்ற விபரங்களை ஓர் அட்டையில் எழுதி வைக்க வேண்டும். மாதிரி ஒன்றுக்கு பேரூட்ட சத்துகளை மட்டும் ஆய்வு செய்ய 5 ரூபாயும், நுண்ணூட்ட சத்துகளையும் சேர்த்து ஆய்வு செய்ய 10 ரூபாயும் கட்டணமாக செலுத்தி வேளாண்மை விரிவாக்க மையங்களில் ஒப்படைக்க வேண்டும்.

* மண் அட்டைகள்:விவசாயிகளிடம் இருந்து பெறப்படும் மண் மாதிரிகள் மண் பரிசோதனை நிலையத்தில் ஆய்வு செய்யப்பட்டு ஆய்வு முடிவுகள் மண் வள அட்டைகளாக விவசாயிகளுக்கு வழங்கப்படும். இம்மண் வள அட்டையில் மண் மாதிரியின் மண் வகை, சுண்ணாம்பு நிலை, மண்ணில் உள்ள உப்பின் அளவு, கார, அமில நிலை போன்றவற்றையும் இவற்றில் பிரச்னை இருப்பின் அவற்றை நிவர்த்தி செய்யும் முறைகளும் குறிப்பிடப்படும். மேலும் மண்ணில் பயிருக்கு கிடைக்கும் நிலையில் உள்ள சத்துகளின் அளவு, விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்ய விரும்பும் பயிருக்கு இட வேண்டிய ரசாயன உரங்கள், உயிர் உரங்கள், தொழு உரங்களின் அளவுகளையும் மண் வள அட்டையின் முன்பக்கத்தில் கொடுக்கப்படும்.. மண்ணிற்கேற்ற மாற்று பயிர்களுக்கான உர பரிந்துரைகளையும் அறிந்து பயனடையலாம்.

ஒரு முறை பெறப்படும் மண் வள அட்டையின் பரிந்துரைகளை மூன்று ஆண்டுகளுக்கு பயன்படுத்தலாம்.தென்காசி வட்டாரத்தில் பிசான பருவ நெல் பயிர் அறுவடை முழுவதும் முடிந்து விட்ட நிலையில் அடுத்த பயிர் சாகுபடிக்கு தயாராகும் விவசாயிகள் மண் பரிசோதனை செய்ய இதுவே ஏற்ற தருணம். தென்காசி வட்டார விவசாயிகள் மண் மாதிரிகளை சேகரித்து உரிய கட்டணத்தை செலுத்தி தென்காசி, பண்பொழி, சுந்தரபாண்டியபுரம் ஆகிய இடங்களில்

செயல்பட்டு வரும் வேளாண்மை விரிவாக்க மையங்களில் ஒப்படைத்து பயன்பெறலாம் என தென்காசி வேளாண்மை உதவி இயக்குநர் ஐரிஷ்சேகர் அறிக்கையில் கூறியுள்ளார்.

**மேலக்கரிசல் குளத்தில் விதை உற்பத்தி பயிற்சி**

தென்காசி:வாசுதேவநல்லூர் மேலக்கரிசல்குளத்தில் விதை உற்பத்தி பயிற்சி முகாம் நடந்தது.வாசுதேவநல்லூர் வட்டாரம் மேலக்கரிசல்குளம் கிராமத்தில் விதை கிராம திட்ட விவசாயிகளுக்கான முதற்கட்ட சிறுதானிய விதை உற்பத்தி முறைகள் குறித்த பயிற்சி முகாம் நடந்தது. வாசுதேவநல்லூர் வேளாண்மை அலுவலர் ராமசாமி தலைமை வகித்து பேசும் போது, சிறுதானிய உற்பத்தி தற்போது அதிகளவில் தேவைப்படுகிறது. இதனால் இதற்கான விதை தேவையும் அதிகரித்துள்ளது. தற்போது சிறு தானியங்களை உணவாக உட்கொள்ள பொதுமக்கள் மிகுந்த ஆர்வத்துடன் இருக்கின்றனர்.

இந்த வாய்ப்பை பயன்படுத்தி சிறுதானிய உற்பத்திக்காக அதிகமான பரப்பளவில் கம்பு, சோளம், கேப்பை மற்றும் மக்காச்சோளம் பயிர்களை பயிரிட்டு அமோக விளைச்சல் கண்டு விவசாயிகள் நல்ல லாபம் அடைய வேண்டும் என்றார்.துணை வேளாண்மை அலுவலர் ரவிச்சந்திரன் பேசும் போது, வல்லுநர் விதை, ஆதார விதை, சான்று விதை பற்றி விளக்கி அவற்றின் தேவைகள் அதிகரித்துள்ளது பற்றியும் கூறினார். மேலும் அவர் மிக சிறுதானியங்களை கூடுதலாக சாகுபடி செய்ய வேண்டும் என்றும், சிறு தானிய விதை ரகங்களான கம்பு ஐ.சி.எம்.வி-221, டபிள்யூ.சி.சி- 75, சோளம் அருப்புக்கோட்டை-1, கோவில்பட்டி-8, கேழ்வரகு கோ-7, பி.ஆர்.-202, மக்காச்சோளம் வீரிய ஒட்டு ரகங்கள் பற்றியும், விதை நேர்த்தி, உயிர் உர நேர்த்தி, தொழு உரமிடுதல், அடியுரமிடுதல் பற்றியும் விளக்கினார்.உதவி வேளாண்மை அலுவலர் பால்ராஜ் வரவேற்றார். பயிற்சியில் திரளான விவசாயிகள் கலந்து கொண்டனர். உதவி வேளாண்மை அலுவலர் சம்சுதீன் நன்றி கூறினார். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் செல்லையா செய்திருந்தார்.

**விவசாயிகள் சங்க மாநாடு**

திருவெண்ணெய் நல்லூர்: திருவெண்ணெய் நல்லூரில் விவசாயிகள் சங்க மாவட்ட மாநாடு நடந்தது.திருவெண்ணெய் நல்லூரில் நடந்த விவசாயிகள் சங்க மாநாட்டிற்கு மாவட்ட தலைவர் சுப்ராயன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் ராமமூர்த்தி, பொருளாளர் கலியமூர்த்தி, குப்புசாமி, சேகர் முன்னிலை வகித் தனர். மாநில நிர்வாக குழு மாசிலாமணி, இ.கம்யூ., மாவட்ட செயலாளர் ஸ்டாலின்மணி, சுரேஷ்மோகன், இன்பஒளி, அர்ச்சுணன், பெரியசாமி, கருணாமூர்த்தி பேசினர். நெல்லுக்கு குவிண் டால் 2,500 ரூபாய், கரும் புக்கு 2,500 ரூபாய் நிர்ணயம் செய்ய வேண்டும். நந்தன் கால்வாய் திட் டத்தை சீர் செய்யவேண் டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப் பட்டன. ஒன்றியக்குழு நாராயணன், ஏழுமலை, லோகநாதன்,சீத்தாம்பு, அய்யனார் உட்பட பலர் கலந்து கொண்டனர். நகர செயலாளர் முருகன் நன்றி கூறினார்.

**நெல் கொள்முதல் செய்பவர்களுக்கு மத்திய, மாநில அரசுகள் கிடுக்கிப்பிடி**

விருதுநகர்: நெல் கொள்முதல் செய்யும் தனியார், நிறுவனங்கள், நிறுமங்களுக்கு மத்திய மாநில அரசுகளின் உணவுப்பொருள் துறை கடும் கட்டுப்பாடுகள் விதித்துள்ளது. உணவுப் பொருள் தட்டுப்பாடு: இந்தியாவில் கரீப் பருவ அறுவடை செப். மாதத்தில் நடந்து முடிந்துள்ளது. இந்த நிலையில் தமிழகத்தில் போதுமான மழை இல்லாததாலும், பருவ கால மாற்றங்களாலும், மற்ற மாநிலங்களான ஆந்திரா, கர்நாடக மாநிலங்களில் வெள்ள பெருக்கு காரணமாகவும் வட மாநிலங்களில் நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இது தவிர பயிறு, பருப்பு உற்பத்தியும் இந்திய

அளவில் போதுமான அளவில் இல்லாததால் உணவுப்பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அரிசி, பருப்பு, பயறு விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி: உணவுப்பொருள் உற்பத்தி கனிசமாக குறைந்து வருவதால் உள் நாட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டு விலை உயர்வு காரணமாக சாதாரண மக்கள் பாதிக்கப்படுகின்றனர். இதனை தவிர்க்க பர்மா, சீன நாடுகளில் இருந்துபருப்பு, சர்க்கரை, பாமாயில் இறக்குமதி செய்யப்படுகிறது. குறைந்த விலையில் உணவுப்பொருள்கள் ரேஷனில் சாதாரண மக்களுக்கு வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.

புதிய கட்டுப்பாடு: அரிசி, நெல் ஆகிய இரண்டையும் கொள்முதல் செய்யும் தனியார், நிறுவனங்கள், நிறுமங்கள் இந்தியாவின் எந்த பகுதியில் இருந்தும் மொத்த அளவு இதற்கு 10 ஆயிரம் மெட்ரிக் டன்னுக்கு மேல் மேல் இருந்தால் அது குறித்து விபர அறிக்கையினை வழங்க வேண்டும். அரசு முதன்மை செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, சென்னைக்கு, குறித்த கால அவகாசத்திற்குள் விபரம் தெரிவிக்க வேண்டும்.
25 ஆயிரம் மெட்டரிக் டன்னுக்கு மேல் கொள்முதல் செய்தால் விபர அறிக்கையினை உரிய படிவத்தில் நிரப்பி குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் அரசு சார்பு செயலாளர், உணவு மற்றும் பொது வினியோகத் திட்டத்துறை, கிரிஷி பவன், புது டெல்லி என்ற முகவரியில் சமர்ப்பிக்க வேண்டும். uspy34.fpd@nic.in என்ற இணையதளத்திலும் தெரிவிக்கலாம்.

மாநில அரசுகள் விபரப்பட்டியல்: மாதந்தோறும் தனியார், நிறுவனம், நிறுமம் ஆகியோரிடம் நெல், அரிசி கொள்முதல் குறித்து சேகரிக்கப்படும் தகவல்களை மாநில அரசு தொகுத்து மாதந்தோறும் மத்திய அரசின் சார்பு செயலாளர், உணவு பொது வினியோகத்திட்டத்துறைக்கு குறிப்பிட்ட காலத்திற்குள் அனுப்ப வேண்டும்.
இணைய தள முகவரி: இதற்கான படிவங்கள் மத்திய உணவுத்துறையின் இணையதளமான www.fcamin.nic.in இணையதளத்தில், மாநில உணவு வழங்கல் துறை www.cosumer.tn.gov.in என்ற இணையதளத்தில் உள்ளது. தனியார், நிறுவனங்கள், நிறுமங்கள் இதனை கடைபிடிக்க வேண்டுமமென உணவு பொருள்கள் வழங்கல் துறை தெரிவித்துள்ளது. இதனை அனைத்து கலெக்டர்களும் தனியார், மற்றும் நெல், அரிசி கொள்முதல் செய்பவர்களுக்கு அறிவுறுத்தும் படி தெரிவித்துள்ளது. மத்திய, மாநில அரசுகளின் கிடுக்கிப்பிடியால் நெல், அரிசி கொள்முதல் செய்து இருப்பு வைப்பவர்கள் கிலியில் உள்ளனர்.

**பெருமாள்தேவன் பட்டியில் மாடுகள் மர்ம சாவு: பாதிப்பில் விவசாயிகள்**

ஸ்ரீவில்லிபுத்தூர்; வன்னியம்பட்டி அருகே பெருமாள் தேவன் பட்டி கிராமத்தில் அடுத்தடுத்து மாடுகள் மர்மமான முறையில் செத்து வருவதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். பெருமாள்தேவன்பட்டி கிராமத்தில் விவசாயிகள் ஆடு,மாடுகள் வளர்த்து வருகின்றனர். இவ் விவசாயிகள் கால்நடைகளை நம்பியே வாழ்க்கை நடத்தி வருகின்றனர். இந்நிலையில் கடந்த 15 தினங்களுக்குள் அடுத்தடுத்து பால் கறக்கும் பசு மாடுகள் திடீரென மர்மமான முறையில் செத்து போயுள்ளது. இதனால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.
கடந்த பத்து நாள்களுக்கு முன் இக்கிராமத்தை சேர்ந்த விவசாயி கோதண்டத்தின் பால் கறக்கும் இரு பசு மாடுகளும், அதே பகுதியை சேர்ந்த கோபாலின் நான்கு பசு மாடுகளும் திடீரென உடல் நடுங்கி கீழே விழுந்து செத்து போனது. அதே போல் நேற்று முன் தினம் சந்திரனின் பசுமாடும் திடீரென செத்து போனது.
ஏழை விவசாயியான இவர்களுக்கு இந்த பசு மாடுகளின் பாலில் இருந்து வரும் வருமானத்தை மட்டுமே நம்பி காலம் தள்ளி வந்தனர். தற்போது மாடுகள் செத்து போனதால் பல ஆயிரம் ரூபாய் நஷ்டமடைந்துள்ளனர். இவர்கள்

தங்களுக்கு அரசு நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.
இது குறித்து கால்நடை டாக்டர் சஞ்சீவி ராஜ் கூறியதாவது: பெருமாள் தேவன்பட்டி கிராமத்தில் பசு மாடுகளின் திடீர் சாவுக்கு அவைகளுக்கு வழங்கப்பட்ட நாள்பட்ட கழனி போன்ற உணவு போன்றவைகளை அதிகளவு உண்டதால் தான் இறந்துள்ளது. மற்றபடி மாடுகள் எவ்வித நோய் தாக்குதலுக்கும் ஆளாகவில்லை. விவசாயிகள் தங்கள் மாடுகளை இன்சூரன்ஸ் செய்யாததால் இழப்பீடு கிடைக்கவும் வழியுமில்லை. என அவர் தெரிவித்தார்.

**140 குவிண்டால் சோளம் வரத்து**

திருப்பூர்: திருப்பூர் காட்டன் மார்க் கெட்டில் ஒரு மூட்டை சோளம் 2,000 ரூபாய் வரை விற்பனையானது. காட்டன் மார்க்கெட் அதிகாரி கூறுகையில், 'சோளம் 140 குவிண்டால் விற்பனைக்கு வந்திருந்தது. குவிண்டால் 1,800 முதல் 2,000 ரூபாய் வரை விற்றது. மிளகாய் ஒரு மூட்டை 5,500 முதல் 6,000 வரை விற்றது. கம்பு 50 குவிண்டால் விற் பனைக்கு வந்திருந்தது; குவிண்டால் 800 முதல் 980 ரூபாய் வரை விற்பனையா னது,' என்றார்.

**சோதனை சூழ்நிலையிலும் சாதனை புரியும் நெல் ஜே-13**
ஏப்ரல் 07,2010,02:20 IST




---

கீழ்பவானி பாசனபகுதியில் குறிப்பாக கோபி பகுதியில் அணைக்கட்டு பாசனத்தில் தமிழகத்தில் முதல் முதலாக ஏப்ரலில் சாகுபடி செய்ய தேர்ந்தெடுப்பது ஜே-13 நெல் ரகமாகும் (வயது 95-100நாட்கள்). இப்பகுதி நிலங்கள் செம்மண் வகையைச் சேர்ந்தது. செம்மண் நிலம் ஜே-13 சாகுபடிக்கு மிகவும் ஏற்றது. நெல்லையில் பருத்தி, மிளகாய், கடலை போன்றபயிர்கள் சாகுபடி செய்யும் புஞ்சை நிலங்களில் சாகுபடி செய்வதற்கு ஏற்று வருவது ஜே-13 நெல் ரகம்.

மதுரை, திண்டுக்கல் மற்றும் காந்திகிராமத்தைச் சுற்றிலும் வறட்சி நிலையில் சாகுபடி செய்வதற்கும் ஜே-13 நெல் ஏற்று வருகின்றது. சேலத்திற்கு அருகில் உள்ளது தர்மபுரி. இந்தப்பகுதியில் காட்டம்பட்டி கிராமத்தில் புரட்டாசியில்தான் நெல் சாகுபடி செய்ய இயலும். புரட்டாசியில் பெய்யும் மழை சாகுபடி செய்ய உதவுகின்றது. ஜே-13 பாசனப்பயிராக சாகுபடி செய்யப் படுகின்றது. தர்மபுரிக்கு அருகில் உள்ள சோகத்தூர் கிராமத்தில் புரட்டாசி பட்டத்தில் ஜே-13 நெல் புஞ்சைப் பயிராக சாகுபடி செய்யப்பட்டு நல்ல மகசூல் எடுக்கப்பட்டு வருகின்றது. விருதுநகர், ராமநாதபுரம் போன்ற பகுதிகளில் புழுதியில் விதைத்து சாகுபடி செய்ய ஜே-13 அதாவது "குச்சி நெல்" விவசாயிகளுக்கு உதவுகின்றது.

தமிழகத்தில் ஜே-13 அரிசியை இட்லி செய்ய உபயோகிக்கின்றனர். இதில் நல்ல மாவு காணுகின்றது. மேலும் ஜே-13 நெல் பொரி செய்வதற்கும் உபயோகப்படுத்தப்படுகின்றது.

ஜே-13 ஆந்திரா பகுதியிலும் சாகுபடியில் உள்ளது. சேலம் பகுதியில் கிணற்றுப் பாசனத்தில் குறுகிய கால ரகமாகிய ஜே-13 நெல்லை முதலில் சாகுபடி செய்துவிட்டு உடனே கரும்பு சாகுபடி செய்யப்படுகின்றது. இதனால் கரும்பில் வெல்லம் மகசூல் அதிகரிக்கின்றது. ஜே-13 நெல் குறுகிய கால ரகமாக இருப்பதால்தான் இது சாகுபடிக்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றது. இது மாதிரியான சோதனை சூழ்நிலையில் ஜே-13 விவசாயிகளுக்கு தொடர்ந்து உதவி வருகின்றது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் இந்த வருடம் ஏரிகள் பின் பட்டத்தில்தான் நிரம்பியது. இருந்தும் மேட்டுப் பகுதியில் நிலங்களில் செம்மண் கொண்ட சூழ்நிலையிலும் கிணற்றுப் பாசனத்தை நம்பியும் துணிச்சலாக சாகுபடி செய்ய ஜே பண்ணையில் ஜே-13 ரகம் தேர்ந்தெடுக்கப் பட்டது. செம்மண் நிலத்தில் நெல்லினை காய்ச்சலும், பாய்ச்சலும் என்ற நிலையில்தான் சாகுபடி செய்ய இயன்றது. வயலில் ஒரு சென்டிமீட்டர் ஆழத்திற்குக்கூட தண்ணீர் தேக்கி நிறுத்த இயலவில்லை. இச்சூழ்நிலையில்தான் சாகுபடி செய்ய வேண்டியுள்ளது. சாகுபடிக்கு ஒரு சென்ட்நாற்றங்கால் தயார் செய்யப்பட்டது. நாற்றங்காலுக்கு 100 கிலோ நன்கு மக்கிய தொழு உரம் இடப்பட்டது. உரத்தோடு 2 கிலோ டி.ஏ.பி. உரம் இட்டு உழவு செய்யப்பட்டது. நல்ல தரமான விதை 3 கிலோ அளவினை தண்ணீரில் ஊறப்போட்டு நாற்றங்காலில் 3.12.2009 அன்று நாற்று விடப்பட்டது.

நாற்று நடுவதற்கு ஒரு வாரம் முன் 50 சென்ட் பரப்பில் நடவு வயல் தயார் செய்யும் பணி துவங்கப்பட்டது. நடவு வயலுக்கு தொழு உரம் இரண்டு டிரெய்லர் லோடு இடப்பட்டது. பின் கடைசி உழவில் 17:17:17 காம்ப்ளக்ஸ் உரம் ஒரு மூடை (50 கிலோ) இடப்பட்டு நிலம் உழவு செய்யப்பட்டது. பின் வயலில் பரம்படித்த பிறகு இரண்டரை கிலோ நுண்ணூட்டச்சத்து மணலுடன் கலந்து வயலில் தூவப்பட்டது. நன்கு தயார் செய்யப்பட்ட நடவு வயலில் 24.12.2009 தேதி குத்துக்கு ஒரு நாற்று வீதம் நடப்பட்டது. நாற்றுக்கள் வரிசையில் (30 செ.மீ. து 30 செ.மீ. ) நடப்பட்டன. நாற்றுக்களை ஆழமாக நடாமல் மேலாக நடப்பட்டன. நடவு வயலில் களைத்தொல்லையை கட்டுப்படுத்த ஆரம்பகட்ட நடவடிக்கையாக "ரிபீட்" என்ற களைக்கொல்லி 250 மில்லி அளவினை மணலுடன் கலந்து 50 சென்ட் பரப்பில் இடப்பட்டது. நடவு செய்த 10 நாட்கள் கழித்து ஒரு முறையும், 25 நாட்கள் கழித்து ஒரு முறையும் வீடர் தள்ளப்பட்டது. பயிர் நடவு செய்த பத்தாம் நாள் யூரியா 15 கிலோவினை 3 கிலோ வேப்பம் புண்ணாக்குடன் கலந்து ஒரு முறையும், நடவு நட்ட 25ம் நாள் இரண்டாவது தவணையாக மேலுரமாக 10 கிலோ யூரியாவுடன் இரண்டு கிலோ வேப்பம் புண்ணாக்கு கலந்து இடப்பட்டது. இம்மாதிரியாக பராமரிக்கப்பட்ட பயிர் எந்தவித பூச்சி, வியாதி பாதிப்பு இல்லாமல் அதிகத் தூர்களுடன் (குத்துக்கு 20-30) வளர்ந்து அறுவடை வரை சாயாமல் இருந்தது. இவ்வாறு கவனமாக சாகுபடி செய்யப்பட்ட பயிர் அதன் வயது 99 நாட்களாக இருக்கும்போது அதாவது 12.3.10 அன்று அறுவடை செய்யப்பட்டது. அறுவடையில் 50 சென்ட் பரப்பில் 15 மூடைகள் (75 கிலோ மூடை) மகசூலாகக் கிடைத்தது. வைக்கோல் மகசூலும் நன்றாக இருந்தது.

**பொருளாதாரம்:** ஜே-13 நெல்லினை 50 சென்ட்டில் சாகுபடி செய்ய மொத்த செலவு ரூ.4,235 ஆனது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது. நாற்றங்கால் செலவு 900.00, நடவு வயல் தயாரிப்பு 750.00, நடவு செலவு 400.00, ரசாயன உரம் 635.00, களைக்கொல்லி 150.00, இரண்டு முறை வீடர் உபயோகிக்க 200.00, பயிர் பாதுகாப்பு, அறுவடை முதலியன 1,200.00, மொத்த செலவு 4,235.00, 15 மூடை நெல்லின் மதிப்பு 10,500.00, அரை ஏக்கரில் வைக்கோல் 250.00, வரவு 10,750.00, சாகுபடி செலவு 4,235.00, அரை ஏக்கரில் நிகர லாபம் 6,575.00.

**சிறந்த ரகம்:** அரை ஏக்கர் சாகுபடியில் சோதனையை எதிர்கொண்டு ஜே-13 ரூ.6,575/- வருமானம் கொடுத்துள்ளது. ஜே-13 நெல் மிகவும் சன்னமானது. இதனை "குச்சி நெல்" என்றும் சொல்கிறார்கள். ஜே-13 தமிழகத்தில் மட்டுமல்லாமல்

ஆந்திராவிலும் நல்ல மகசூல் கொடுத்து வருகின்றது. வசதி குறைந்த விவசாயிகளுக்கு அவர்களது கடும் உழைப்பினை மதிக்கும் அளவிற்கு வாரிவழங்கும் நெல் ரகம் ஜே-13 ரகமாகும்.**-எஸ்.எஸ்.நாகராஜன்**

**சின்ன சின்ன செய்திகள்**

ஏப்ரல் 07,2010,02:19 IST



**ஐசோபாம் - பயறு வகைகளுக்கான மானியம்:** ஆதார விதை உற்பத்தி ரூ.10/- கிலோ. சான்று விதை உற்பத்தி ரூ.10/- கிலோ. சான்று விதை வினியோகம் - ரூ.12/- கிலோ. ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகத்திடல் அமைத்தல் - ரூ.12,320/- 10 எக்டர் தொகுப்பு. ஜிப்சம் வினியோகம் - ரூ.750/- எக்டர். கைத்தெளிப்பான் வினியோகம் - 50% (அ) ரூ.800/-. செயல் விளக்கத் திடல் அமைத்தல் - ரூ.12,000/ திடல். உயிர் உரம் வினியோகம் - ரூ.100/ எக்டர். உயிரியல் பூச்சி மருந்து வினியோகம் - 50% (அ) ரூ.250/எக்டர். பைப்லைன் அமைக்க ரூ.15,000/ யூனிட். என்.பி.வி. வைரஸ் வினியோகம் - ரூ.250/எக்டர். டி.ஏ.பி.உரக் கரைசல் தெளித்தல் ரூ.100/எக்டர். நுண்ணூட்ட உரம் தெளித்தல் - ரூ.500/எக்டர். விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல் - ரூ.15,000/பயிற்சி (50 விவசாயிகள் - 2 நாட்கள்)

**பயனாளிகள் தகுதி:** பயறுவகை சாகுபடிசெய்யும் சிறு / குறு / இதர விவசாயிகள்.

**ஐசோபாம் - மக்காச்சோளம்:** சான்று விதை உற்பத்தி - ரூ.10/கிலோ. சான்றுவிதை வினியோகம் -ரூ.12/கிலோ. செயல் விளக்கத்திடல் அமைத்தல் - ரூ.4000/5 எக்டர். ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகத் திடல் அமைத்தல் - ரூ.22,650/10 எக்டர். பைப்லைன் அமைக்க- ரூ.15,000/யூனிட். விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல்- ரூ.15,000/பயிற்சி (50 விவசாயிகள்)

**பயனாளிகளின் தகுதி:** மக்காச்சோளம் சாகுபடி செய்யும் சிறு/ குறு / இதர விவசாயிகள்.

மேலும் திட்டங்கள் பற்றிய அனைத்து விபரங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்கள் - இணை வேளாண்மை இயக்குனர், மதுரை மற்றும் வேளாண்மை துணைஇயக்குனர், உதவி இயக்குனர், வேளாண்மை

அலுவலர், துணை வேளாண்மை அலுவலர், வேளாண்மை உதவி அலுவலர்) ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டம் (நெல்) - மதுரை மாவட்டத்தில் 2009-10ம் ஆண்டில் செயல்படுத்தப்படும் மானியத்திட்டத்தில் சான்று விதை வினியோகம் - 5ரூபாய்/கிலோ. செம்மை நெல் சாகுபடி செயல் விளக்கத் திடல் அமைத்தல் - (10 எக்டர் தொகுப்பு) 75 ஆயிரம் ரூபாய் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகத்திடல் அமைத்தல் - (40 எக்டர் தொகுப்பு) 17 ஆயிரம் ரூபாய் மானியமாக பெறலாம். பயனாளிகளின் தகுதி: நெல் சாகுபடி செய்யும் சிறு/குறு/ இதர விவசாயிகள்.
-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**நவீன தொழில்நுட்பம்**
ஏப்ரல் 07,2010,02:18 IST

களர் உவர் நில மேம்பாடு: தமிழகத்தில் 3 லட்சம் எக்டர் நிலங்கள் களர்-உவர் நிலமாக உள்ளன. இந்த நிலத்தை சீர்திருத்தம் செய்தால் சுமார் 15 லட்சம் டன் அதிகமாக உணவு உற்பத்தி செய்ய முடியும். செங்கல்பட்டு, சேலம், தஞ்சாவூர், திருச்சி, ராமநாதபுரம் மாவட்டங்களில் உவர்நிலம் அதிக பரப்பிலும், செங்கல்பட்டு, வட ஆற்காடு, திருச்சி, சேலம், திருநெல்வேலி, தர்மபுரி மாவட்டங்களில் களர்நிலம் அதிக பரப்பிலும் காணப்படுகின்றன. களர் நிலத்தில் மண் இறுகி காற்றோட்ட வசதி இல்லாமல் இருப்பதால் வேர் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. உழவு செய்வதற்கு கடினமாக இருக்கும். தொலி உழவு செய்யும்போது தண்ணீர் வடியாமல் சேறு போன்று காணப்படும். சோடியம் கார்பனேட் மற்றும் பைகார்பனேட் உரங்கள் வேரின் வளர்ச்சியைப் பாதிக்கின்றன.

களர்நில சீர்திருத்தம்: நிலத்தை 20-30 சென்ட் பாத்திகளாக பிரித்து ஒரு அடி உயரத்திற்கு சுற்றி வரப்பு கட்டவேண்டும். நிலத்தில் 100-200 அடி இடைவெளியில் ஒன்றரை அடி அகலமும் 2 அடி ஆழமும் கொண்ட வடிகால் வெட்டவேண்டும். இப்பகுதிக்கு மேலுள்ள பகுதியிலிந்து உப்புக்கள் வடிந்துவிடாமல் இருக்க குறு வடிகாலும் அமைக்க வேண்டும். வடிகால்களை ஒன்றோடொன்று இணைத்து முடிவாக கழிவுநீர் எல்லாம் ஒருமுகமாக வெளியேறும்படி அமைக்க வேண்டும். மண் பரிசோதனைப்படி பரிந்துரை செய்யப்பட்ட அளவு ஜிப்சத்தை பாத்திகளில் சீராக பரப்பி நீர் பாய்ச்சி உழவேண்டும். நீரை 4 முதல் 6 அங்குல உயரத்திற்கு தேக்கிட வேண்டும். இந்நீர் தானாகவே கசிந்து வடிகாலில் வழிந்திடவேண்டும். வாய்க்கால்களில் வெட்டிவிடக் கூடாது. நீர் குறையக் குறைய 4-6 அங்குலம் உயரத்திற்கு 2 அல்லது 3 நாட்கள் வரை தொடர்ந்து நீரை தேக்கிக் கொண்டிருக்க வேண்டும். வடிகாலில் கசிந்துவரும் நீர் சோடியம் கரைந்த உப்பு நீராகும். இதனை வெளியேறச் செய்ய வேண்டும். இவ்வாறு 3 அல்லது 4 தடவைகள் செய்ய வேண்டும்.

வடிகாலை சீராக வைத்துக்கொண்டு வருடா வருடம் தக்கைப்பூண்டு, கொளுஞ்சி போன்ற பசுந்தாள் உரப் பயிர்களைப் பயிரிட்டு மடக்கி உழுது, நீரைத் தேக்கி வடியவைத்தால் மிதமான களர் நிலத்தை நல்ல விளைநிலமாக மாற்ற முடியும். கரும்பாலைக் கழிவுகளை பிரஸ்மட், தென்னை நார்க்கழிவு, பனை ஒலை மற்றும் புங்கம் தழை முதலியவைகளையும் இட்டு களரை நீக்கலாம். அதிக களர் நிலத்திற்கு அதாவது பிஎச் 8.9க்கு மேல் உள்ள நிலத்திற்கு ஜிப்சம் இடுவது சிறந்தது. சுண்ணாம்பு அதிகம் உள்ள களர்நிலத்திற்கு ஜிப்சத்திற்கு பதிலாக இரும்பு சல்பேட்டை இடவேண்டும். பயிரிடும்போது நெல்லுக்கு துத்தநாக சல்பேட்டும இதர பயிர்களுக்கு நுண்ணூட்டக்கலவையும் இடவேண்டும். உரமிடும்போது தழைச்சத்து உரமாக அம்மோனியம் சல்பேட்டும் மணிச்சத்து உரமாக ராக் பாஸ்பேட்டும் இடுவது நல்லது.

உவர்நிலம் என்றால் அதில் நீரில் கரையக்கூடிய உப்புகள் (இசி) அளவு பொதுவாக 4 மிமோஸ் செ.மீ.க்கு மேல் இருக்கும். பெரும்பாலும் சோடியம் குளோரைடு, சோடியம் சல்பேட், கால்சியம் குளோரைடு, மக்னீசியம் சல்பேட் ஆகிய

உப்புக்கள் பெருமளவில் கலந்திருக்கும். இதனை சவ்வூடு பரவுதல் மூலம் பயிர்களின் வேர்களுக்கு எளிதில் நீரை உறிஞ்சும் சக்தி குறைந்துவிடும். பயிரின் மகசூல் பாதிக்கப்படுகிறது. (தகவல்: க.ராமமூர்த்தி, செ.ராதாமணி, ப.சுப்பையன், உழவியல் துறை, த.வே.பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003).

**பராமரிப்பு இல்லாததால் கருகிய மூலிகை பண்ணை**

ஏப்ரல் 07,2010,00:00 IST



உசிலம்பட்டி: உசிலம்பட்டி அருகே செட்டியபட்டி மலைக்கணவாயில் வனத்துறையினர் பல லட்சம் செலவில் உருவாக்கிய மூலிகை பண்ணை தொடர் பராமரிப்பில்லாமல் கருகிவிட்டது. போதுமான நிதி ஒதுக்கீடு இல்லாததால் பராமரிக்க முடியவில்லை என வனத்துறையினர் தெரிவித்தனர்.

உசிலம்பட்டி தேனி ரோட்டில் மலைக்கணவாய் பகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலை மேம் பாட்டுத்திட்டத்தின் கீழ் மூலிகை பண்ணை திட்டத்தை உருவாக்கினர். மலைப்பகுதியில் நிலங்களை சமப்படுத்தியதுடன் மோட்டார் பம்ப் செட் அமைத்து சொட்டு நீர் பாசனம், பெரிய அளவிலான செடிகளுக்கு சொட்டு நீர் பாசனத் திற்காக மண்பானைகள் என அனைத்து நவீன வசதிகளுடன் இந்த மூலிகை பண்ணை உருவானது. பண்ணையில் வளர்க்க ஆழியாறு மூலிகை பண்ணையில் இருந்து பல்வேறு வகையான மூலிகை செடிகள் கொண்டு வரப்பட்டன. பலவேறு மூலிகைகளை இந்த பண்ணையில் நர்சரி போட்டு உருவாக்கினர்.

அரிய வகை மூலிகை செடிகளான வல்லாரை, முறிகூட்டி, தவசுமுருங்கை, அக்கரைக்காரம், தூதுவளை செம்பருத்தி, குறுமிளகு, கருந்துளசி, மகிழம், ஆத்தி, சீகைக்காய், நித்தியகல்யாணி, நெல்லி, கருஊமத்தை, மந்தாரை, மஞ்சல்கரிசலாங்கன்னி, வெள்ளருக்கு, நிலப்பனை, சீமைஅரளி, நந்தியாவட்டை, ஏழுஇலைப் பனை, மகாகனி, கருஞ்சித்தகத்தி, மாசிப்பச்சை, நாகமல்லி, வெட்டிவேர், சிறியாநங்கை, ஆடாதொடை, சிற்றரத்தை, காட்டு மரிக்கொழுந்து, சர்ப்பகந்தி, துளசி உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட மூலிகை ரகங்களை உருவாக்கினர்.

மலையடிவாரத்தில் இயற்கையான சூழலில் அமைக்கப்பட்ட இந்த மூலிகை பண்ணைக்கு ஆராய்ச்சி மாணவர்கள், சித்த மருத்துவர்கள் என பல்வேறு தரப்பினர் வந்தனர். இங்கு மூலிகை செடிகள் குறித்த விபரங்களை தெரிந்து கொண்டதுடன், அரிய வகை மூலிகைகளையும் பயிரிட கொண்டு வந்து சேர்த்தனர். அப்போது மாவட்ட கலெக்டராக இருந்த ராஜேந்திரன் மற்றும் வனத்துறை, சமூக காடுகள் திட்ட அதிகாரிகள் இந்த மூலிகை பண்ணையை உருவாக்குவதில் பெரும் கவனம் செலுத்தினர். மூலிகை பண்ணை உருவாக்க திட்டமிட்ட வனத்துறையினர், அதை

தொடர்ந்து பராமரிக்க நிதி ஒதுக்கீடு கிடைக்காததால் அப்படியே விட்டுவிட்டனர். இதனால் நூற்றுக்கணக்கான மூலிகைச்செடிகள் பராமரிப்பில்லாமல் கருகிப் போனது. வறட்சியை தாங்கக் கூடிய ஒருசில செடிகள் மட்டும் தப்பிபிழைத்துள்ளது. பலலட்சம் செலவில் உருவான அரிய மூலிகை பண்ணை தற்போது முழுவதுமாக அழியும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த மூலிகை பண்ணையின் நிலை குறித்து உசிலம்பட்டியில் மூலிகை மருத்துவரான கலைச்செல்வி கூறியதாவது: வனத்துறை மூலிகை பண்ணை அமைத்த போது நாங்களும் ஏராளமான அரிய வகை மூலிகை செடிகளை கொடுத்தோம். ஆனால், வனத்துறையினர் பண்ணையை பராமரிக்க சரியான நிதி ஒதுக்கீடு கிடைக்கவில்லை என பண்ணையை கவனிக்காமல் விட்டுவிட்டனர். நமது பாரம்பரிய வைத்தியமான சித்த வைத்தியத்திற்கு தேவைப்படும் அரிய வகை மூலிகைகள் இங்கு உருவாக்கப்பட்டு கண் முன்னால் அழிந்து வருகிறது. வனத்துறை அதிகாரிகள் மட்டுமல்லாமல் அரசும் இதை மீண்டும் நல்லமுறையில் கொண்டு வர போதிய வசதிகளை செய்து தரவேண்டும் என்றார். வனச்சரகர் தேவதாஸ் கூறியதாவது: கடந்த சில மாதங்களாக அங்கு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மேலும், பண்ணையை பராமரிக்க நிதியுதவியும் கேட்டுள்ளோம். விரைவில் பண்ணையை புதுப்பொலிவுடன் கொண்டு வருவோம் என்றார்.

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## *பொள்ளாச்சி பகுதியில்*

## *பலத்த மழைக்கு 4 ஆயிரம் வாழைகள் சேதம்*

## *சூறாவளி காற்றில் 25 வீடுகளின் மேற்கூரைகள் பறந்தன*

*பொள்ளாச்சி,ஏப்.7–*
*பொள்ளாச்சி அருகே சூறாவளி காற்றுடன் பலத்த மழை பெய்தது. இதில் 4 ஆயிரம் வாழைகள் சாய்ந்து சேதமானது. 25 வீடுகளின் மேற் கூரைகள் காற்றில் பறந்தன.*

*சூறாவளி காற்றுடன் மழை*

*பொள்ளாச்சி–பாலக்காடு மெயின் ரோட்டில் அய்யம் பாளையம் கிராமம் உள்ளது. இங்கு நேற்று முன்தினம் இரவு சுமார் 7மணி அளவில் சூறாவளி காற்றுடன் பலத்த மழை பெய்தது. பலத்த காற்றில் வீடுகளின் மேற்கூரையில் வேயப்பட்டிருந்த ஓடு, சிமெண்ட் ஷீட்டுகள் மற்றும் தென்னை ஓலைகள் பறந்தன. அதே போல் வீட்டின் பக்க வாட்டு சுவர்களும் இடிந்து விழுந்தன.வீடுகளின் அருகே இருந்த மரங்கள் கீழே சாய்ந்து விழுந்தன.இதில் சுமார் 25 வீடுகள் சேதம் அடைந்தன.*

*இதே போன்று அய்யம்பாளையம் பகுதியில் கணேஷ் என்பவரது தோட்டத்தில் பயிரிடப்பட்ட சுமார் 3 ஆயிரம் வாழைகளும், சிவசாமி, ராசு ஆகியோரது தோட்டத்தில் பயிரிடப்பட்ட சுமார் ஆயிரம் வாழைகளும் ஆக மொத்தம் 4ஆயிரம் வாழைகள் பாதியில் முறிந்து சாய்ந்தன. இதனால் சுமார் ரூ.4லட்சம் மதிப்பிலான வாழைகள் சேதம் அடைந்தன.*

சேத மதிப்பு குறித்து கணக்கெடுப்பு

இது பற்றிய தகவல் கிடைத்ததும் பொள்ளாச்சி தாசில்தார் வெங்கடேசன், வருவாய் ஆய்வாளர் ஜெயராஜ், கிராம நிர்வாக அலுவலர் இளங்கோவன், ஒன்றியக்குழு உறுப்பினர் திப்பம்பட்டி ஆறுச்சாமி, ஊராட்சி மன்ற துணைத்தலைவர் ராசு ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். பின்னர் அவர்கள் சேதமடைந்த வீடுகளையும், சாய்ந்து விழுந்த வாழை மரங்களையும் பார்வையிட்டனர்.

மேலும் சூறாவளி காற்று காரணமாக பாதிப்பிற்கு உள்ளானவர்களுக்கு ஆறுதல் கூறினர்.

வருவாய் துறையினர் சேதமதிப்பு குறித்து கணக் கெடுப்பு செய்து தமிழக அரசுக்கு அறிக்கை அனுப்பினர். இதே போன்று பொள்ளாச்சி தோட்டக்கலை துறையினரும், சூறாவளி காற்று காரணமாக சேதம் அடைந்த வாழை மரங்களை பார்வையிட்டு சேத மதிப்பு குறித்து கணக்கெடுப்பு நடத்தினர்.